Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
உள்நாடு வெளிநாடுகளுக்கான சகல விதமான
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303,K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 09 (06.10.2003) திங்கட்கிழமை இதழ்:06

# ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரங்களை குறைப்பதற்கு மிக விரைவில் சட்டமூலம்!

## நாடாளுமன்றம் கொண்டுவருகிறது ரணில் அரசு

(கொழும்பு)

**ஜனாதிபதியிடம் உள்ள பாதுகாப்பு தொடர்பான அதிகாரங்களை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போதுள்ள அரசியல் யாப்பின்படி, ஜனாதிபதியே முப்படைகளினதும் தலைவியாக உள்ளார். இந்த அதிகாரங்களை அவரிடமிருந்து நீக்கி பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருவதே அரசின் நோக்கமாகும்.**

இவ்வாறு கொண்டுவரப்படவுள்ள சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து பெரும்பான்மையைப் பெறவேண்டும். ஆனால், இந்தச் சட்டமூலம் அரசியல் யாப்புக்குள் அடங்கவில்லை எனவும், இதனால் இது முன்னுரிமை அடிப்படையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட விருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நிபுணர்கள் தெரிவித்தனர்.

தேசிய பாதுகாப்பு சபையை உருவாக்குவதில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுவதுடன் பாதுகாப்புத் தொடர்பான கூட்டங்களின்போது ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு, அமைச்சர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் சமுகம் தரவேண்டும்.

நாடாளுமன்றில்நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக எடுக்கப்படும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர்களை விடுதலை செய்யுமாறு கோரி

# இறங்குதுறை ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தம்!

(வடமராட்சி)

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு வேங்கைகளின் நினைவாக வெளியிடப்பட்ட சுவரொட்டியை எடுத்துச்சென்ற பருத்தித்துறை இறங்குதுறையில் கடமையாற்றும் ஊழியர்கள் இருவர் நேற்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து இறங்குதுறை ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

சுப்பர்மடத்தைச் சேர்ந்த இயேசு பற்றிக் ராஜ்குமார் (வயது18), நடராஜா ஜெயகாந்தன் (வயது18) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய காவலரண் அமைக்கும் ஈ.பி.டி.பி.

ஸ்ரான்லி வீதியிலுள்ள தமது அலுவலகத்தின் பாதுகாப்புக் கருதி, புதியதொரு காவலரண் அமைக்கும் பணியில் ஈ.பி.டி.பியினர் ஈடுபட்டிருந்ததை நேற்றுக் காணமுடிந்தது.

ஏற்கனவே இந்த முகாமின் வாசலுக்கு முன்பாக காவலரண்கள் அமைக்கப்பட்டு இராணுவத்தினர் பாதுகாப்புப் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அத்தோடு வீதியின் இருமருங்கிலும் இராணுவத்தினர் தீவிர காவற்கடமையில் ஈடுப்பட்டுள்ளனர்.

தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்படுவதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## விண்ணாணம் விநாசியர்



அம்மான்ர பல்லைப் பிடுங்க தீர்மானிச்சாச்சு போல....!

# வவுனியாவில் காணாமற்போன சிறுமிகள் நேற்று விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டனர்!

வவுனியாவில் பல நாட்களுக்கு முன்னர் காணாமற்போன 15 மற்றும் 16 வயதுச் சிறுமிகள் இருவர் விடுதலைப் புலிகளால் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டனர்.

இந்த இரு சிறுமிகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைவதாகக் கடிதம் எழுதிவைத்து விட்டுச் சென்றதையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக அவர்களின் பெற்றோர் விடுதலைப் புலிகளிடம் முறையிட்டனர். குறித்த சிறுமிகள் எவரும் தமது இயக்கத்தில் இணையவில்லை எனத் தெரிவித்த விடுதலைப் புலிகள், அதுதொடர்பான விசாரணைகளை ஆரம்பித்தனர்.

நேற்று இரு சிறுமிகளும் வவுனியாவிலுள்ள மறவன்புலத்தில், மக்கள் நடமாட்டமற்ற பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் சிறுமிகளிடம் விசாரித்தபோது, தம்மை ஒருவர் முச்சக்கர வண்டியில் அழைத்துச் சென்று தம்முடன் தகாத உறவு கொண்டதாகவும், பின்னர் தம்மை மன்னார் பகுதிக்குக் கொண்டு சென்று, மூவர் தம்முடன் தகாத உறவு கொண்டதாகவும், பல நாட்களின் பின்பு மீண்டும் மறவன்புலத்தில் கொண்டுவந்து விடப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரையும் மீட்ட விடுதலைப் புலிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைத்து, இரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்குமென

# நம்பிக்கை தெரிவிக்கிறார் ஜப்பானிய வங்கி பிரதிநிதி!

## குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின்

# பதினாறாவது ஆண்டு நினைவுநாள்

விண்ணாணம் விநாசியர்



அம்மான்ர பல்லைப் பிடுங்க தீர் மானிச்சாச்சு போல....!

# நேற்று விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டனர்!

வவுனியாவில் பல நாட்களுக்கு முன்னர் காணாமற்போன 15 மற்றும் 16 வயதுச் சிறுமிகள் இருவர் விடு தலைப் புலிகளால் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டனர்.

இந்த இரு சிறுமிகளும் விடுத லைப் புலிகள் இயக்கத்தில் இணை வதாகக் கடிதம் எழுதிவைத்து விட் டுச் சென்றதையடுத்து, இந்தச் சம் பவம் தொடர்பாக அவர்களின் பெற் றோர் விடுதலைப் புலிகளிடம் முறை யிட்டனர். குறித்த சிறுமிகள் எவரும் தமது இயக்கத்தில் இணையவில்லை எனத் தெரிவித்த விடுதலைப் புலி கள், அதுதொடர்பான விசாரணை களை ஆரம்பித்தனர்.

நேற்று இரு சிறுமிகளும் வவுனி யாவிலுள்ள மறவன்புலத்தில், மக் கள் நடமாட்டமற்ற பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடு தலைப் புலிகள் சிறுமிகளிடம் விசா ரித்தபோது, தம்மை ஒருவர் முச்சக் கர வண்டியில் அழைத்துச் சென்று தம்முடன் தகாத உறவு கொண்ட தாகவும், பின்னர் தம்மை மன்னார் பகுதிக்குக் கொண்டு சென்று, மூவர் தம்முடன் தகாத உறவு கொண்ட தாகவும், பல நாட்களின் பின்பு மீண் டும் மறவன்புலத்தில் கொண்டுவந்து விடப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரையும் மீட்ட விடு தலைப் புலிகள், போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவிடம் ஒப்படைத்து, இரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரான்லி வீதியிலுள்ள தமது அலுவலகத்தின் பாதுகாப்புக் கருதி, புதியதொரு காவலரண் அமைக்கும் பணியில் ஈ.பி.டி.பியினர் ஈடுபட்டிருந் ததை நேற்றுக் காணமுடிந்தது.

ஏற்கனவே இந்த முகாமின் வாசலுக்கு முன்பாக காவலரண்கள் அமைக்கப்பட்டு இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள் ளனர். அத்தோடு வீதியின் இரு மருங்கிலும் இராணுவத்தினர் தீவிர காவற்கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்படு வதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்குமென

# நம்பிக்கை தெரிவிக்கிறார் ஜப்பானிய வங்கி பிரதிநிதி!

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகுமென தான் நம்புவதாக சர்வதேச ஒத்துழைப்புக் கான ஜப்பானிய வங்கியின் பிரதி நிதி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி யுடன் இணைந்து அரசாங்கம் புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

சமாதானத் திட்டமென அழைக் கப்படும் இந்தத் திட்டமானது சமூ கத்தையும் உட்கட்டமைப்பு அபிவி ருத்தியையும் ஏனைய தேவைகளை யும் நோக்கமாகக் கொண்டிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. தமது வங்கி சம்பந்தமான முயற்சிகளில் நேரடியாகத் தொடர்பு கொள்ளாத போதிலும், சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின்

# பதினாறாவது ஆண்டு நினைவுநாள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் குமரப்பா புலேந் திரன் உட்பட பன்னிரு வேங்கை களின் 16 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு தாயகப் பிரதேச மெங்கும் நேற்று உணர்வெழுச்ச ியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் கோப்பாய், வல்வெட்டித்துறை ஆகிய இடங்கள் மற்றும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் நேற்றுக் காலை 9 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல் லத்தில் நடந்த நிகழ்வில் - யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் பொறுப்பாளர் சுதாஸ் தேசியக்கொடி யினை ஏற்றினார். ஈகச்சுடரினை கோப்பாய் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் யாழவன் ஏற்றிவைத் தார்.

தொடர்ந்து பன்னிரு போராளி களின் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலைகளை வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப் பாளர் தமிழ் மாறன் அணிவித்தார். தொடர்ந்து பொது மக்களும் மலரஞ் சலி செலுத்தினர்.

அதேவேளை வடமராட்சி எள்ளங் குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் தேசியக்கொடியினை எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப் பாளர் எஸ்.தமிழரசன் ஏற்றிவைக்க ஈகைச்சுடரினை ஆனந்தராஜா ஏற்றி வைத்தார்.

பன்னிரு மாவீரர்களின் திருவுரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# துன்பங்கள், நெருக்குதல்களை எதிர்கொண்ட ஆசிரியர்களின் பணி பாராட்டுதலுக்குரியது!

### தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிக்கை

கடந்த காலங்களில் எமது பகுதி களில் வன்கவர்வுப் போர் நடந்த போது எமது ஆசிரியர்கள் ஆற்றிய பணி போற்றத்தக்கது. ஆசிரியர் பற்றாக் குறை, வளப்பற்றாக்குறை, பொருண் மியத் தடைபோன்ற பல சிக்கல்களை எதிர்கொண்டபோதும் ஆசிரியர்கள் தமது பணியை உயர்வாகக் கருதி அச்சத்தையும் துன்பத்தையும், நெருக் குதல்களையும் எதிர்கொண்டு ஆற் றிய பணி மிகவும் பாராட்டுக்குரியது.

உலக ஆசிரியர் தினம் இன்று கொண்டாடப்படுவதையிட்டு கல்வி மேம்பாட்டுப் பேரவை விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும்,

உலகத்தில் மக்களுக்குத் தொண்டு செய்பவர்கள் நன்றியுடன் நினைவு கூருவதும், பாராட்டுவதும் மனிதநேயப் பண்புகளில் ஒன்று என் பது மட்டுமன்றி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமாகும். இந்த வகை யில் ஆசிரியர் நாளையொட்டி எமது தேசத்தின் ஆசிரியர்களை வாழ்த்து வதிலும் பாராட்டுவதிலும் கல்வி மேம் பாட்டுப் பேரவை பெருவகையடைகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நெல்லியடியில் சுவரொட்டிகள் படையினரால் அகற்றப்பட்டன!

குமரப்பா, புலேந்திரன் உட்படப் பன்னிரு வேங்கைகளின் 16 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வை யொட்டி நெல்லியடியில் ஒட்டப்பட் டிருந்த சுவரொட்டிகள் இராணுவத் தினரால் நேற்று அகற்றப்பட்டன.

குமரப்பா, புலேந்திரனின் 16 ஆவது நினைவு நாள் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதனையொட்டி நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சுவரொட்டிகள் ஒட் டப்பட்டிருந்தன.

இதனையே, நேற்று அதிகாலை நகரப் பகுதிக்கு வந்திருந்த பத்துக் கும் மேற்பட்ட இராணுவத்தினர் அகற்றினர். (111)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# இனவன்முறைகளைத் தூண்டும் படையினரின் செயலை தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்!

## யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்.தண்ணீர் தாங்கியடியில் இராணுவ ட்ரக் வண்டி மோதி இரு இளைஞர்கள் பலியான கோரவிபத்துச் சம்பவத்திற்குப்பின் அப்பகுதியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் மேற்கொண்ட அத்துமீறல்கள் இன வன்முறைகளைத் தூண்டக் கூடியது.

இதனைத் தமிழ்மக்கள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள். இராணுவமும், பொலிஸாரும் கூட்டாக இணைந்து செயற்படுத்திய இச் செயலை, யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து - யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சட்டம், ஒழுங்கைப் பராமரிக்க வேண்டிய பொலிஸாரே நீதிக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளனர். விபத்துக்குப்பின் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகளைப் புறக்கணித்தும், குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினருக்கு துணைபோயுள்ளனர்.

விபத்து நடந்த இடத்திலிருந்து- இராணுவ ட்ரக், மோட்டார் சைக்கிள், பலியான இரு இளைஞர்களின் உடல்கள் என்பவற்றை அகற்ற இராணுவத்தினர் முற்பட்டபோது, உணர்ச்சி மேலீட்டால் அங்கு கூடிய மக்கள் அதனை எதிர்த்துள்ளனர். மேலதிக படையினர் குவிக்கப்பட்டு தடயங்கள் அகற்றப்பட்டுள்ளன.

இது மக்களை ஆத்திரமூட்டியது உணர்ச்சி மேலிட்டால், ஒன்று திரண்ட மக்கள் நீதி கோரினர். மக்களைச் சீண்டவிட்டு அப்பிரதேச மக்களின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்தனர். வேட்டுக்களைத் தீர்த்தும், கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், தடியடிப் பிரயோகத்தைச் செய்தும் தங்கள் அடாவடித்தனங்களைப் பொலிஸாரும், இராணுவத்தினரும் மேற்கொண்டனர். இது மக்கள் விரோதச் செயற்பாடாகும். மேலும், மக்கள் போராட்டம் விரிவடைந்து சம்பவம் நடைபெற்ற இடத்திலுள்ள காவலரண்களை அகற்றக்கோரி போராட்டம் வெடித்தது.

மக்களை அமைதிப்படுத்தி எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் தடுக்கும் நோக்குடன் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினருடன் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்த விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது அப்பட்டமான போர் நிறுத்த மீறலாகும். அமைதிச் சூழலைக் குழப்பி, போரைத் தூண்டும் வகையில் இராணுவத்தினர் செயற்பட்டுள்ளனர். இது எமக்கு மிகுந்த கவலையை அளித்துள்ளது. மேலும் இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக்குழு நடந்து கொண்ட முறை பக்கச்சார்புடையது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்துகிறோம். இதனை இவர்கள் எதிர்காலத்தில் கைவிடவேண்டும்.

இந்தச் சம்பவத்தினால் ஏற்பட்ட உணர்வெழுச்சியைப் படையினர் புரிந்துகொள்ளத்தவறிவிட்டனர். மக்கள் போராட்டமாக வெடித்தபோது பிரதான வீதி, கொழும்புத்துறை வீதி, சின்னக்கடை, குருநகர் வீதி எங்கும் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு - ஆயுதங்கள், கொட்டான் பொல்லுகள் என்பவற்றுடன் காணப்பட்டனர்.

மக்களை அச்சுறுத்தி, அவர்களது உணர்வுகளை நசுக்க இராணுவம் முயலுமானால், இராணுவத்தை முற்றாக வெளியேற்ற மக்கள் பொங்கியெழுவார்கள் என்பதைப் படையினருக்கு உணர்த்துவோம்.

மேலதிகமாகக் குவிக்கப்பட்டுள்ள படையினர் முற்றாக வெளியேற்றப்பட்டு பதற்றம் தணிக்கப்பட வேண்டும். மக்கள் அச்சமின்றி நடமாட பிரயாணம் செய்ய உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தில் திருட்டு

(உடுவில்)

அராலி தெற்கு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தின் கதவை உடைத்து, உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த தாம்பர விக்கிரகங்களை திருடிச் சென்றுள்ளனர். இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தற்பொழுது நடைபெறும் நவராத்திரிப் பூசைகளை மேற்கொள்வதற்காக - மேற்படி ஆலயத்தின் குருக்கள் வழமைபோல் பூசைக்கு சென்று, கோவில் கதவைத் திறந்த போது, சுவாமிகளைக் காணாது திகைப்படைந்தார். நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த பிள்ளையார், முருகன், வள்ளி, தெய்வானை, வேல் என்பனவே திருடப்பட்டுள்ளன. இந்தத் திருட்டு தொடர்பாக, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## யாழ்.கல்வி வலயங்களில் ஆசிரியர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தில் சர்வதேச ஆசிரியர்தின விழா நிகழ்வுகள் சிறப்பாக இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் கோட்டத்திற்கான நிகழ்வு - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர் கோட்டத்திறகான நிகழ்வு - யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கோட்ட நிகழ்வு - யாழ். மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் யாவும் அந்தக் கோட்டங்களின் அதிபர் சங்கத்தின் தலைவர் தலைமையிலேயே நடைபெறும். இந்த நிகழ்வில் - கடந்த ஒரு வருடத்திற்குள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட எழுத்துத் திறன் தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

### நிலையறி பரீட்சை

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால், தரம் மூன்று மாணவர்களுக்கு விசேடமாக நடத்தப்படவுள்ள நிலையறி பரீட்சை, நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கிப்படுகிறது.

இப்பரீட்சைக்குரிய தமிழ், கணித எழுத்துமூல வினாத்தாள்கள், மாகாணக் கல்வி அமைச்சினால் - ஒவ்வொரு வலயப் பணிமனைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் அடைவுமட்டத்தை அறியும்பொருட்டு நடத்தப்படவுள்ள இந்த நிலையறி பரீட்சைப் பெறுபேறுகள் ஆய்வுக்குட்படுத்தப்படவும் உள்ளன. (83)

## சிறுவர் இல்லங்களுக்கான விளையாட்டு விழா

சிறுவர் தினத்தை முன்னிட்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன், வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் சிறுவர் இல்லங்களுக்கிடையில் நடத்திய விளையாட்டு விழா, கடந்த முதலாம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் முற்பகல் 9 மணிக்கு போட்டி விளையாட்டுக்கள் ஆரம்பமாகி பிற்பகல் வரை நடைபெற்றன.

கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், உடற்பயிற்சிப் போட்டிகள் மற்றும் கராத்தே கண்காட்சிகள் என்பன மிகவும் விறுவிறுப்பாக நடந்தன. 10 இற்கு மேற்பட்ட சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர்- மிகவும் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் கலந்து தத்தம் திறமைகளை வெளிக்காட்டினர்.

பிற்பகல் சிறுவர் கௌரவிப்பும், வெற்றிக்கேடயங்கள் வழங்கும் நிகழ்வும், விசேடமாக முதியோர் தினத்தையொட்டி மூதாதையர் கௌரவிப்பு நிகழ்வும், மைதான சிறப்பு மேடையில் இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சி.இராசநாயகம், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறை வேற்றுப் பணிப்பாளர் கே.பி றெஜி, நிறுவனப்பணிப்பாளர் தாசன் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

கரப்பந்தாட்ட போட்டியில் - நவஜீவனம் 1 ஆம் இடத்தையும், ஆரோபணம் 2 ஆம் இடத்தையும், தென்னிந்திய திருச்சபை 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வலைப்பந்தாட்டப் போட்டிகளில்- குருகுலம் 1 ஆம் இடத்தையும், செஞ்சோலை 2 ஆம் இடத்தையும், பாரதி இல்லம் 3 ஆம் இடத்தையும் பெற்றன.

உடற்பயிற்சிப் போட்டியில்- சாலோம் நகர் தென்னிந்திய திருச்சபை இல்லம் 1 ஆம் இடத்தையும் புனிதபூமி 2 ஆம் இடத்தையும் காந்தரூபன் அறிவுச்சோலை 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இல்லங்கள் பெற்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில்- தென்னிந்திய திருச்சபை இல்லம் 10 புள்ளிகளைப் பெற்று- 1 ஆம் இடத்திலும், நவஜீவனம், குருகுலம் இல்லங்கள் முறையே 7 புள்ளிகளைப் பெற்று - 2 ஆம் இடத்திலும் வெற்றிகளை தமதாக்கிக்கொண்டன.

வெற்றிபெற்ற இல்லங்களுக்கு கேடயங்களும், பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்

29 – 05 – 1978




தாயக மண்ணில்

06 – 10 – 1998

### கடற்புலி 2 ஆம் லெப்.சாளி

### ஜெயந்தி வேல்சாமி

(நடன ஆசிரியை அ.த.க.பாடசாலை துனுக்காய்)



தாயகத்தை மீட்டுவிட
தரணியிலே உதித்தவளே
எம் தலைவன் வழிதனிலே
புயலாகிப் புறப்பட்டு
புதுயுகம் படைத்து
புவியிலே எமையெல்லாம் விட்டுப்பிரிந்து
ஐந்து ஆண்டுகளென்ன ஐந்நூறு
ஆண்டுகள் சென்றாலும் உன்னை
ஒரு போதும் மறவோம்.



ஜெயா லேடீஸ் அக்கடமி
(spoken and Grammar classes)
519, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி1635)

## தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன்...

**ஊவா மாகாணம்**

**பதுளை வலயம் :**

எம்.இந்திரகுமார் (பதுளை சார்ணியா தமிழ் ம.வி.), ஆர்.யோதிலட்சுமி (பதுளை சார்ணியா தமிழ் ம.வி.), கி.சர்மிளா (பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்), எஸ்.சுதர்சினி (பதுளை ஹாலி எல தமிழ் ம.வி.), திருமதி ச.தயாளினி (பதுளை பாரதி வித்தியாலயம்).

**பண்டாரவளை வலயம் :**

கே.தர்சினி (பண்டாரவளை ஹப்புத்தளை தமிழ் வித்தியாலயம்).

**பசறை வலயம் :**

ப.புவனேஸ்வரி (பதுளை பசறை தமிழ் ம.வி.), எஸ்.ஜெயலட்சுமி (பதுளை பசறை தமிழ் ம.வி.).

**வெலிமடை வலயம் :**

திருமதி ஏ.எல்.குரைசியா பீபீ (பதுளை வெலி மடை முஸ்லிம் ம.வி.), ஆர்.டி.எம்.றில்வான் (பதுளை வெலி மடை முஸ்லிம் ம.வி.).

**தெஹியோவிற்ற வலயம் :**

நிசாரா (கே.தெஹி புனித மரியாள் தமிழ் ம.வி.), எம்.தேவராஜ். (கே.தெஹி - தெஹியோவிற்ற தமிழ் ம.வி.), திருமதி ஜமுனாமதி (கே. தெஹி -புனிதமரியாள் தமிழ் ம.வி.), ஏ.பி.எவ்.நஸ்லியா (கே.தெஹி - ஸ்ரீ கதிரேசன் தமிழ் ம.வி.).


திறைஞ்சனாஸ் சங்கானை

மாதவன், சிம்ரன், சிநேகா நடித்த

பார்த்தாலே பரவசம்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

STRATEGIC COMMAND

(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.

பிரசாந், கிரண், நடித்த

வின்னர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1619)

லைடனில் மாபெரும் மலிவு விற்பனை

01.10.2003 முதல் 24.10.2003 வரை மாபெரும் மலிவு விற்பனை ஆடவர்களுக்கான சூட்டிங், சேட்டிங், பொக்ஸ் சேட்ஸ் மற்றும் நங்கையருக்கான ஸ்கேட், பிளவுஸ், சாறிகள், பஞ்சாபி வகைகள், சுடிதார், குழந்தைகளுக்கான சூட்வகைகள் மற்றும் வீட்டுக்கதவுகள், யன்னல்களுக்கான திரைச்சீலைகள் மற்றும் சகலவிதமான துணி வகைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பொருட்களுக்கும் விசேட கழிவு உண்டு

தொலைபேசி-2222381

(சி1644)

## கட்சியில் தொடர்ந்து இருக்கும்படி
# ஜனாதிபதி சந்திரிகா விடுத்த வேண்டுகோளுக்கு
# முன்னாள் அமைச்சர் ரிச்சட் பத்திரன மறுப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியில் தொடர்ந்து அங்கத்துவம் வகிக்கும்படி ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை, முன்னாள் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன மறுத்துள்ளார்.

ஜனாதிபதியின் விசேட அழைப் பின்பேரில் ஜனாதிபதி மாளிகைக்கு சென்ற ரிச்சட் பத்திரனவிடமே இந்த வேண்டுகோளை ஜனாதிபதி விடுத்திருந்ததாக தெரியவருகிறது. இதற்கு மறுப்புத் தெரிவித்த ரிச்சட் பத்திரன தான் மிகவிரைவில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப் போவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை - எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் ரிச்சட் பத்திரன தென மாகாணசபை முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடவுள்ளதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது தென்மாகாணசபையில் அங்கம் வகிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் எட்டுப்பேரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவி ரிச்சட் பத்திரனவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியினர் ஜே.வி.பியினருடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இவர்கள் கட்சி மாறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் சர்வதேச ஆசிரியர்தின விழா!

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஆசிரியர் தினம், இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம், கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை யாழ்.மாவட்ட பொறுப்பாளர் கவியன்பன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

சங்கத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், சதுரங்கம், கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் இறந்தால் புதிய நடைமுறை

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்படும் கைதிகள் மரணமாகும் சம்பவங்களில், புதிய நடைமுறைகளைக் கையாளுமாறு - பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தடுப்புக் காவலிலுள்ள கைதிகள் மர்மமான முறையிலே மரணமாகும் சம்பவங்கள் - அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன். இவற்றை ஓரளவு தடுப்பதற்காகவே இந்த உத்தரவை பிரதம நீதியரசர் பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது. தடுப்புக்காவலிலுள்ள கைதிகள் மரணமடைந்தால், அது தொடர்பான முழு விபரங்களும் அடங்கிய அறிக்கையை, சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய அதிகாரி சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளையும், சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார் மேற்கொள்ளக்கூடாது. அந்த விடயத்தை வேறு பொலிஸ் நிலையத்திடம் கையளிக்கவேண்டும் எனவும் நீதியரசர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சொகுசு வாகன இறக்குமதிக்கு அனுமதி

பத்துக்கோடி ரூபா பெறுமதியுள்ள 32 அதிநவீன சொகுசு வாகனங்களை - இறக்குமதித் தீர்வையின்றி, இறக்குமதி செய்ய, நிதி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பான அறிக்கையில் - நிதி அமைச்சர் கே.என்.சொக்ஷி கையெழுத்திட்டார்.

நேற்றுமுன்தினம் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலிலேயே, இந்த அதிநவீன சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# கொழும்பு ஜெம்பட்டா வீதியில் இளைஞன் சுட்டுக்கொலை!

கொழும்பு -கொட்டாஞ்சேனை ஜெம்பட்டா வீதியில் - நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில், இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.


உயிரிழந்தவர் 27 வயதுடையவரெனத் தெரிவிக்கப்படுகிறது. மூவரைக்கொண்ட கோஷ்டியே இந்தக் கொலையை மேற்கொண்ட தாக்கவும், இவர்கள் தற்போது தலைமறைவாகி இருப்பதாகவும் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் - அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும், அவர்களைத் தேடும் நடவடிக்கையில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்திய மீனவர்கள் பத்து பேர் தலைமன்னார் கடலில் கைது

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்க முயன்ற இந்திய ரோலர் ஒன்றை கடற்படையினர் கைப்பற்றினர். இந்த ரோலரில் இந்திய மீனவர்கள் 10 பேர் இருந்துள்ளனர். இவர்கள் அனைவரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னார் நீதிவான் எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, இவர்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் - இன்று வரை விசாரணைகளை ஒத்திவைத்துள்ளார்.



பண்டாரநாயக்கவின் நினைவுதினமான கடந்த 26 ஆம் திகதி ஹொரகொல்லவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட முப்படைத்தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபருடன் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த உரையாடுவதைப் படத்தில் காணலாம்.



ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தத்தையடுத்து கொழும்புப் பயணத்துக்காக முண்டியடிக்கும் பிரயாணிகள்.

# கல்விக்கான வசதிகள் மறுக்கப்பட்டபோதும் தமிழ் மாணவர்களை நெறிப்படுத்தியவர்கள்

## ஆசிரியர்களுக்கு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பாராட்டு

(கொழும்பு)

சிங்கள அரசு - தமிழ் மக்களின் கல்விக்கும், ஏனைய வசதிகளுக்குமான உரிமைகளை மறுத்தபோதும்-விடாமுயற்சி, அர்ப்பணித்த சேவை மூலம், கல்வியுலகில் தமிழ் மாணவர்களை முன்னிலைப்படுத்திய பெருமை எமது ஆசிரியர்களையே சாரும்.

இவ்வாறு ஆசிரியர் தினத்தை முன்னிட்டு - விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

உலக வரலாற்றில், ஈடிணையற்ற சேவையாற்றி உயர்ந்த இடத்தைக் பெற்றுக் கொண்டவர்கள் ஆசிரியர்கள். மாணவர் சமூகத்தினரால் புனித தெய்வங்களாக மதிக்கப்படும் ஆசிரியர்கள் ஆற்றிய சேவைகள் அளப்பெரியன.

ஆளணிப் பற்றாக்குறை, வளப் பற்றாக்குறை நிலவுகின்ற சூழ்நிலையிலும் - மக்கள் இடம்பெயர்ந்து மரங்களின்கீழ் வாழ்ந்த காலங்களிலும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், போரியல் சிந்தனையிலும் அர்ப்பணிப்போடு ஈடுபட்ட ஆசிரியர் சமூகத்தை, தமிழ் மக்கள் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கின்றனர்.

விடுதலைப் போர் உச்சமடைந்த காலங்களில், களத்தில் வீரவரலாறு படைத்து, புதுயுகம் படைத்த ஆசிரியர்களையும் இந்த நாளில் நினைவு கூருகின்றோம். போரும், கல்வியும் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஒன்றிணைந்தபோது, பாடசாலைகளில் கல்விக்காகவும், களமுனைகளில் மண்ணின் விடுதலைக்காகவும் தியாக உணர்வோடு உழைத்த ஆசிரியர்கள் - எம்மண்ணிலேயே உருவாகிய வரலாற்றுப் பெருமை எமக்குண்டு.

எனவே, அரசாங்கம் தமிழ் மாணவர்களின் கல்விக்கும், வளங்களுக்குமான சந்தர்ப்பங்களைக் குறைத்தபோதெல்லாம் - காலமும், நேரமும் பாராது - உறுதியுடனும், உணர்வுடனும் செயற்பட்டு - எமது மாணவர் சமுதாயத்தின் விருத்தியிலும், வளர்ச்சியிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு பாராட்டிக் கௌரவிக்கும் அதேவேளை, எதிர்காலங்களிலும் அவர்களின் சேவை மாணவர்களைச் சென்றடைய வாழ்த்துகிறோம்.

என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா ஓட்டோ விபத்தில் சாரதி உட்பட மூவர் காயம்!

(வவுனியா)

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில், நேற்று முன்தினமிரவு ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில், சாரதி உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

பூந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு, வீதிக்கு குறுக்கே சென்ற மாட்டுடன்-வந்து கொண்டிருந்த ஓட்டோ மோதிய போதே, இந்த விபத்து ஏற்பட்டதற்குக் காரணமாகும். மாட்டுடன் அடிபட்ட ஓட்டோ - தலைகீழாகப் புரண்டதுடன், ஓட்டோவில் வந்தவர்கள் படுகாயமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் தற்போது வவுனியா ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(03)

## பஸ் விபத்தில் காயம்

(கொழும்பு)

தெல்தெனியாவிலிருந்து கண்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்வண்டி ஒ்ன்று, நேற்று முன்தினம் காலை பாதையை விட்டு விலகி, விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## வட்டிவீதம் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கி வருடாந்த வட்டிவீதத்தை தற்போது குறைத்துள்ளது.

இதுவரை காலமும் இருந்த வட்டிவீதத்திலிருந்து 0.5 வீதத்தை தேசிய சேமிப்பு வங்கி குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(72)

# சமஷ்டி ஆட்சிமுறை பற்றி ஆராய்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஐரோப்பா பயணம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் அமையவுள்ள இடைக்கால நிர்வாகசபையில், முஸ்லிம் மக்களின் பங்கை உறுதிப்படுத்தும் நோக்கில், முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இது தொடர்பாக - எதிர்வரும் 26 ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில், 11 பேர் கொண்ட குழுவொன்று புறப்படவுள்ளது.

இங்கிலாந்தில் இருவாரகாலம் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர்-அங்கிருந்து ஐரோப்பிய நாடுகள் பலவற்றிக்கு விஜயம் செய்யவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள சமஷ்டி ஆட்சிமுறைபற்றி ஆராயவுள்ள இக்குழுவினர் - அந்த நாடுகளில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், அதிகாரங்கள் தொடர்பாகவும் ஆராயவுள்ளனர்.

இதன்பின்னர், நாடு திரும்பும் குழுவினர் - முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் கலந்துரையாடியபின், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபையில் முஸ்லிம்களின் பங்கு தொடர்பாக, அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்கள் எனவும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# சிறைச்சாலை சட்டங்களை மாற்றியமைக்கத் திட்டம்

(கொழும்பு)

107 வருடம் பழமை வாய்ந்த சிறைச்சாலைச் சட்டங்களை மாற்றியமைக்கப் போவதாக, ஜயவர்த்தன சிறைச்சாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வென்றில் சிறைச்சாலை ஆணையாளர் ரூபி மர்சூக் தெரிவித்தார்.

அதேவேளை, நீண்டகாலமாகத் திருத்தப்படாதுள்ள சிறைச்சாலைகளினால், கைதிகள் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்குவதாகவும், இதனால், சாதாரண குற்றவாளிகள்கூட பெரும் குற்றச்செயல்களைச் செய்வதற்குத் தூண்ட வழிவகுக்கும் என மேலும் கூறியுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் காப்புறுதி, கொடுப்பனவுத் திட்டங்களை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.



கரம்பொன் சண்முகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற தீவுப்பகுதி இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த செயலமர்வை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.




ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தால் அண்மையில் செல்லாச்சி அம்மையார் வீதியிலுள்ள சுன்னாகத்தை சேர்ந்த பி.சுரேந்திரன் என்பவருக்கு யாழ்.கிளை முகாமையாளர் ஏ.எம்.நடராஜா நஷ்ட ஈட்டிற்கான காசோலையை வழங்கும்போது எடுக்கப்பட்ட படம்.

# தமிழ்மக்களின் மீது மீண்டுமொரு தடவை இராணுவ வன்முறை ஏவிவிடப்பட்டுள்ளது!

## யாழ்.மாவட்ட சனசமூகநிலையங்களின் சம்மேளனம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக இராணுவ வாகனங்களினால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கொல்லப்பட்டும், படுகாயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டதுடன், சட்டத்தின் முன் தடயங்களை அழித்தும், தப்பியோடியும், தமது பிழைகளிலிருந்தும் இராணுவத்தினர் தப்பியுமுள்ளனர். இவ்வாறான ஒரு சம்பவமே நேற்றுமுன்தினம் யாழ்.தண்ணீர்த் தாங்கியடியில் நடந்தது.

நேற்றுமுன்தினம் யாழ்.தண்ணீர் தாங்கியருகில் இராணுவ ட்ரக்- மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களை மோதிக் கொன்ற சம்பவத்திற்கு, எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின் விபரம் வருமாறு,

வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகம் நடைபெறுவதாகக் கூறிக்கொண்டு, தமிழ்மக்கள் மீது மீண்டும் இராணுவ அடக்குமுறை ஏவிவிடப்பட்டுள்ளது என்பதையே இரு நாட்களாக நடந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்த வகையிலேயே அப்பாவி இளைஞரகள் இருவர் இராணுவ வாகனத்தால் மோதிக் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட கோண்டாவில் அன்னங்கையைச் சேர்ந்த ம.லிங்கரூபன், வடமராட்சியைச் சேர்ந்த எம்.இராசகுமார் ஆகிய இருவரும் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களாவர்.

நடந்த சம்பவத்தைக் கண்டித்து சாத்வீக வழியில் வீதிமறியற் போராட்டத்தில் ஈடுபடும் மக்களை, கண்ணீர் புகைக்குண்டுகளைக் கொண்டும், குண்டாந்தடிப் பிரயோகத்தை மேற்கொண்டும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டும் அடக்க முனைந்தமை, இராணுவ மேலாதிக்கமென்றே மக்கள் கருதுகிறார்கள்.

இந்தச்செயற்பாடுகள் இம்மண்ணில் சிங்களப் பேரினவாத இராணுவத்தின் ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாகவே மக்கள் கருதுகின்றனர். வீதி விதிமுறைகளுக்கு முரணாகச் சட்டத்தின் காவலர்கள் எனக்கூறிக் கொள்பவர்களே, சந்திக்குச் சந்தி காவலரண்களை அமைத்து, போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளனர்.

இந்தவகையான ஒரு காவலரண் காரணமாகவும், இராணுவத்தின் கவனயீனம் காரணமாகவுமே இந்த விபத்து இடம்பெற்றது. இரு இளைஞர்களும் வீதிக்கு ஒதுக்குப் புறமான கரையில் மோதிக் கொல்லப்பட்டுள்ளதுடன், அதிலுள்ள தடயங்களையும் அழிக்கவும், நீக்கவும் முற்பட்டமையே மக்கள் கொதித்தெழக் காரணமாகும்.

இதேநேரம், சமாதானம் குலைந்து விடக்கூடாது என்பதற்காகவும், மக்களுக்கும், இராணுவத்துக்கும் இடையே தேவையற்ற, விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு, தடுக்கச்சென்ற விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மீது திட்டமிட்ட முறையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையும் மற்றும் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிப்பதுடன்,

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நியாயமான முறையில் விசாரணைகளை மேற்கொண்டு, இராணுவத்தினரின் யுத்தநிறுத்த மீறலை வெளியுலகத்திற்குக் காட்ட வேண்டுமெனவும் வேண்டிக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் சிறுவர் முதியோர் தினவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலகம் நடாத்தும், சர்வதேச சிறுவர், முதியோர் வாரவிழா நிகழ்வுகள் - பிரதேசசெயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில், தென்னிந்திய திருச்சபை பாலர் பாடசாலை மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளது

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தனும், சிறப்பு விருந்தினராக நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவனும், கௌரவ விருந்தினர்களாக அருட்திரு ரி.எச். வசந்தகுமாரும், சாவகசேரி கைத்தொழில் வணிக மன்றத் தலைவர் பீ. என்.சற்குணராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளில், சிறுவர் தின, முதியோர் வாரவிழா சம்பந்தமாக நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கலும், முதியோர் கௌரவிப்பும் மற்றும் விசேட கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

# சின்னஞ்சிறு செய்திகள்

## நூல்கள் கொள்வனவு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால், ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான நூல்கள் சுன்னாகம் பொது நூலகத்துக்கும் ஏனைய நூல்களும் உடுவில் ஏழாலை நூலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் ஆங்கில நூல்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டதாகவும், எல்லாத்துறைகளை சேர்ந்த நூல்களும் இதில் அடங்கியுள்ளதாகவும குறிப்பிடப்பட்டுள்ளது. (72)

## முதியோர்தின விழா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் சிறுவர் விழாவும், முதியோர் தின விழாவும் - நாளை மறுநாள், புதன் கிழமை காலை 10 மணிக்கு பிரதேச மண்டபத்தில் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (72)

## கலாசார விழா அங்குரார்ப்பண கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கலாசார விழா அங்குரார்ப்பண கூட்டம் - எதிர்வரும் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு மகா ஜனாசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அளவெட்டி, பன்னாலை, இளவாலை போன்ற கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (72)

## கலாசார உத்தியோகத்தர் கூட்டம்

யாழ்ப்பாணத்தின் சகல பிரதேச செயலகங்களையும் சேர்ந்த கலாசார உத்தியோகததர்களுக்கான கூட்டம் - நாளை செவ்வாய்க் கிழமை, பதில் அரச அதிபரின் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (72)

## பாடசாலை அதிபர்களுக்கு செயலமர்வு

(புன்னாலைக்கட்டுவன்)

ஜீ.ரி.இசட் நிறுவன உதவியோடு, தீவக வலய பாடசாலை அதிபர்களுக்குப் பாடசாலை மட்ட மதிப்பீடு தொடர்பான செயலமர்வு - நாளை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்விற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை அதிபர்களை, தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

முன்பு திட்டமிட்டு பிற்போடப்பட்ட செயலமர்வு இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# பொதுமகன் மீது கடற்படையினர் காரைநகரில் தாக்குதல் சம்பவம்!

காரைநகரில் பொதுமகன் ஒருவரை - கடற்படையினர் நேற்று முன்தினம் மாலை, கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

காரைநகரை சொந்த இடமாகக் கொண்ட மகாலிங்கம் சிவபாலன் (வயது 29) என்பவரே கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானவராவார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நேற்று முன்தினம் மாலை காரைநகருக்கு 24 மணிநேர மின்சாரம் விநியோகிக்க இருந்தவேளை, அதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு, மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். வீதியின் இடையே ஒரு கிடங்கு இருந்துள்ளது. அதனை விலத்தி, மோட்டார் சைக்கிளைச் செலுத்தியபோது, இவருக்கு பின்னால் பிக்கப் வாகனத்தில் வந்த கடற்படையினர் இவரை வழிமறித்து, தமக்கு முன்னால் வேண்டுமென்றே மோட்டார் சைக்கிளை ஓட்டியதாகக் கூறி கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றதனால், இவர் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்திலேயே முறைப்பாடு செய்துள்ளார். நேற்று இவர் இது குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார் (52)

## நாடகம் இரண்டாம் இடம்

போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாகாணமட்ட நாடகப் போட்டியில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்களின் "போதை அற்ற நாளை" என்ற நாடகம் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. (91)

# வீதியில் இடம்பெற்ற அனர்த்தத்தின்பின் பிரதான வீதி வழமைக்கு திரும்பியுள்ளது

இரண்டு நாள்களாக இடம் பெற்ற அனர்த்தங்களின் பின்னர் யாழ்ப்பாணம் பிரதான வீதி நேற்று வழமைக்கு திரும்பியது.

அதிகாலை முதல் பாதுகாப்பிற்கென பிரதான வீதிகள், சந்திகள் என்பவற்றில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர். கண்ணாடித் துண்டுகளாலும், கழிவுப் பொருட்களாலும் போக்குவரத்து செய்ய முடியாது இருந்த வீதியையும் படையினர் துப்பரவு செய்தனர். இதனால் போக்குவரத்து சேவைகள் வழமைக்குத் திரும்பின.

சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய சிலரிடம் இராணுவத்தினர் அடையாள அட்டைகளைப் பரிசோதித்து விசாரணை நடத்தினர். பொலிசாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

வீதியெங்கும் பரவிக் கிடந்த சிறு கண்ணாடித் துண்டுகளினால் பாதசாரிகள் இடையூறை எதிர்நோக்கியதாகவும் சில வாகனங்களின் ரயர்கள் காற்றுப் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நிலமைகள் வழமைக்கு திரும்பினாலும் மக்கள் அச்சத்துடனேயே நடமாடியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இரண்டு நாள்களும் இடம் பெற்ற சம்பவங்களின் போது பல சைக்கிள்கள் காணாமல் போயுள்ளன. பொலிசார் சைக்கிள்கள் சிலவற்றை சேதபடுத்தி எடுத்துச் சென்றதாக நேரில் கண்ட சிலர் தெரிவித்தனர்.

இரு செய்தியாளரகளின் சைக்கிள்கள் உட்பட பல சைக்கிள்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தன்று நடைபெற்ற களோபரத்தை பயன்படுத்தி சைக்கிள திருடர்கள் சிலரும் தமது கைவரிசைகளைக் காட்டியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சைக்கிள்களை தவறவிட்டவர்கள் நேற்று தமது சைக்கிள்களை தேடி வீடு வீடாக அலைந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

# கிளிநொச்சியில் சுகாதார வசதிகளின்றி இயங்கிய வெதுப்பகம் மூடப்பட்டது

கிளிநொச்சி - விஸ்வமடுப் பகுதியில், அடிப்படை சுகாதார வசதிகளின்றி இயங்கிய, வெதுப்பகம் மூடப்பட்டது.

சுகாதாரச் சீர்கேடான முறையில் உற்பத்தியில் ஈடுபட்ட வெதுப்பகம் - தமிழீழ சுதாகாரசேவையினராலதின் நடவடிக்கையின் போது மூடப்பட்டது.

மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, தமிழீழ சுகாதார சேவையினரால் ஆய்வு செய்யப்பட்ட போது, அடிப்படை வசதிகளுடன் வெதுப்பகம் காணப்படாமை, சுகாதாரமற்ற முறையிலும் காணப்பட்டது. வெதுப்பகத்தில் பணிபுரியும் பணியாளரான தனிநபர் - சுகாதார பழக்கமற்றவராக காணபபட்டமை,

பழுதடைந்த பாண்கள், கோதுமை மாவை அரித்துப் பாவிப்பதற்கு அரிதட்டு இல்லாமை, தயாரிக்கப்பட்ட பாணினுள் பனஞ்சிராய் காணப்பட்டமை போன்ற காரணங்களுக்காக - வெதுப்பகம் சுகாதார வசதிகளுடன் திருத்தும்வரை தற்காலிகமாக சீல் வைக்கப்பட்டுள்ளது.

# காணாமற்போனோர் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விசாரணை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் காணாமற்போனார் தொடர்பாக, மனித உரிமை ஆணைக்குழு நேற்று முன்தினம் விசாரணைகளை நடத்தியது.

கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த விசாரணை அதிகாரிகளான - எம்.சி.எம்.இக்பால், தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவினரே, இதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இந்த விசாரணைக்கு, காணாமற்போனோரின் உறவினர்கள் சமூகமளித்திருந்தனர் எனத் தெரியவருகிறது.

# பாடசாலை மாணவருக்கு நிகொட தளபாட உதவி

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளுக்கு, நிகொட் நிறுவனத்தால் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தளபாடங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இலக்கியச்சோலை

சிறுகதை

# ஒரு ஊரின் இரண்டு மனிதர்கள்

உங்களிற்கு சிவராமனைத் தெரியுமா? அநேகமாகத் தெரிந்திருக்க நியாயமில்லை. நீங்களெல்லோரும் அறிந்திருக்குமளவுக்குப் பிரபலமானவனல்ல அவன். தவிரவும், ஊரவர்களே அவனை மறந்துகொண்டிருக்கும்போது, உங்களுக்குத் தெரிவதென்றால் எப்படி?

ஆற்றமுடியாத ரணமாக என் நெஞ்சில் ஆழப்பதிந்துவிட்ட சம்பவங்களுக்குச் சொந்தக்காரன் அவன். இந்தச் சம்பவங்கள் மற்றும் அவன் தொடர்பான கதையிது.

சிவராமனிற்கும் எனக்கும் நட்புத் தொடங்கியது இன்று நேற்றல்ல. வெகு காலத்திற்கு முன்னரே ஆரம்பித்துவிட்டோம். எங்களின் நட்புத் தொடங்கிய காலத்தைச் சரியாகக் கணக்கிடமுடியாது. அப்படிக் கணக்கிட முயன்றால், அது சிவனின் அடிமுடியைத் தேடிய கதையாகத்தான் போய் முடியும். அநேகமாக நாங்கள் இருவரும் நடக்கத் தொடங்கியதும் செய்த காரியம், நட்புப் பூண்டதாகத்தான் இருக்க வேண்டும். இப்போதுதான் வன்னியிலிருக்கிறேனே தவிர, எனதும் சிவராமனினதும் 'பூர்வஜென்மபூமி' இதுவல்ல. திருகோணமலையின் கந்தளாய்.

எங்கள் வீட்டிலிருந்து இரண்டு வீடு தள்ளியிருந்தது அவனது வீடு. எங்கள் நட்பின் ஆரம்பத்துக்கு இதுவும் காரணமாக அமைந்திருக்கலாம்.

எனது அப்பாவைப்போல அவனது அப்பா அரச உத்தியோகத்தர் அல்ல. அவர்களது பரம்பரைத் தொழில் கரும்புப் பயிர்ச்செய்கை. சிவராமனின் தந்தைக்குச் சொந்தமாகப் பெரிய கரும்புத் தோட்டம் ஒன்றிருந்தது. அநேகமாக எங்களின் மதியப் பொழுதுகளை அந்தத் தோட்டம் தின்றுவிடும்.

அந்தக் கரும்புத் தோட்டத்திற்குள் போயிருப்பது என்றால், எனக்கு கரும்பு தின்பது மாதிரி. யாருக்கும் தெரியாமல் தோட்டத்திற்குள் புகுந்தோமெனில், எங்கள் உலகம் 'இனிமை'யானதாக அமையும்.

இவ்வளவு நட்பாயிருந்த எங்களுக்குள் பிரிவென்பதேது? பாடசாலைக்குச் செல்வதாயினும், ஒன்றாகவே செல்வோம், ஒன்றாகவே திரும்புவோம். இருக்கைகூடப் பக்கத்துப் பக்கத்தில்தான்.

எந்த நேரமும் கதைத்துக்கொண்டேயிருக்கும் அவனால், நான்கூட இரண்டொரு தடவை அடி வாங்கியிருக்கிறேன். ஆயினும், அவனிலிருந்த பிரியம் மாத்திரம் குறையவேயில்லை. கணித பாடத்தில் பின்னக் கணக்குகளினுள் சிக்குண்டுவிடும் அவனை, மீட்டெடுக்கவும் நான்தான் வேண்டும்.

காலஓட்டத்தில் பத்தாவது வகுப்பில் எமது பிரிவு முதன்முதலில் ஏற்பட்டது. தன் ஜென்மத்துப் பகையான கல்வியுடனிருந்த சொற்ப உறவையும் அறுத்துவிட்டு, கரும்புத் தோட்டத்திற்குள் புகுந்துவிட்டான்.

நான் பாடசாலைக்கும்... அவன் தோட்டத்திற்கும் செல்வதால், முன்னர்போல் சந்தித்துக்கொள்வதில்லை. எப்போதாவது சந்திக்கும் பொழுதுகளில், பாடசாலையைப் பற்றி ஆவலாகக் கேட்பான். என் நண்பனைக் காண எனக்குள் வேதனை பிறக்கும். அவனுடன் மட்டும் முரண்டு பிடித்த கல்வியிலும் சிறுகோபம்.

இந்த நாட்களிலொன்றில்தான் அது நடந்தது. அப்போது எனக்குப் பதினேழு வயதிருக்கவேண்டும். என்னால் மட்டுமல்ல, ஊரிலிருந்த எவராலுமே மறக்கமுடியாத நாள். அந்த நாள் பற்றி இன்றும் கதைக்கும்பலர், அன்றே தாம் இறந்துவிட்டதாகத்தான் கூறுகின்றனர்.

அன்றுதான் எங்கள் ஊருக்குள் இராணுவம் புகுந்தது. இராணுவம் புகும்போது சும்மா புகுகின்றதா? எதிர்ப்பட்டவர்களைச் சுட்டும்... வெட்டியும், வெறியாட்டம் பண்ணியபடிதான் புகுந்தது.

உயிரையும், கையில் அகப்பட்டதையும் எடுத்துக்கொண்டு ஓடினோம். ஓடும்போது சிவராமனின் நினைவு வந்ததுதான். எறிகணையும், தோட்டாவும் விரட்ட என் கையைப் பிடித்தபடி அப்பா புயலாக விரையும்போது, நானென்ன செய்வது?

அன்றைய முழுப்பகலும், அரையிரவும் ஓடி வெகுதூரத்திற்கப்பாலுள்ள கோயிலடியில் மிகுதி இரவைக் கழித்தது... மறுநாள் பார்க்கையில் சோகத்திலும் ஒரு சுகமாக சிவராமன் குடும்பமும் அங்கு நின்றது என, அந்த நாட்களின் நிகழ்வுகள் நீண்டகதை. அதைத் தவிர்த்து பின் நிகழ்ந்தவற்றைக் குறிப்பிடுகிறேன்.

நாங்கள் அனைவரும் வடக்கே போவதாக முடிவெடுத்தோம். ஒரு பகுதியினர் யாழ்ப்பாணப் பக்கமும்... நாங்கள் கொஞ்சப்பேர் வன்னிக்கு போனோம்.

நான் சிறிது படித்திருந்தமையால் வேலையொன்று சுலபமாகக் கிடைத்துவிட்டது. சிவராமனின் பாடுதான் திண்டாட்டமாகப் போய்விட்டது. அவன் அதிகமாகப் படித்தவனுமல்ல. சொந்தமாகத் தொழில் தொடங்க, பணவசதி கொண்டவனுமல்ல. ஊரில்தான் கரும்புத்தோட்டம் வைத்திருந்தான். இங்கே கரும்புத் தோட்டத்திற்கு எங்கே போவான்?

அவன் ஓய்ந்துவிடவில்லை. காடுவெட்டிக் களனியாக்கி, சிறு தோட்டமொன்று செய்தான். அதிக வருவாயென்றில்லாவிட்டாலும், அளவுக்கதிகமாக அவனைச் சிரமப்படுத்தவில்லை. இந்தநிலை கிட்டத்தட்ட அதாவது, மூன்றாண்டுகள் வரையிலும் நீடித்தது. விவசாயத்தின்மூலம் அரைவயிறோ... கால்வயிறோ நிரப்பிக்கொண்டிருந்தபோதுதான், சிவராமன் ஒரு காரியம் செய்தான். இதனைக் கேட்டால் உங்களுக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

சிவராமன் திருமணம் செய்துவிட்டான்!

திருமணம் செய்வதில் என்ன ஆச்சரியமிருக்கின்றது என்று கேட்கிறீர்களா? அவசரப்படாதீர்கள் முழுதும் கேளுங்கள். திருமணம் செய்வதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. திருமணத்திற்காகத் தெரிவுசெய்த பெண்ணில்தான் ஆச்சரியமேயிருந்தது.

அநேக ஆண்களென்றால், திருமணத்தின்போது ஒரு விடயத்தைக் கவனிப்பார்கள். ஏழேழு பிறவிக்கும் சோறு போடக்கூடிய சீதனத்தில்தான் கவனம் செலுத்துவார்கள். ஆனால், சிவராமன் இருக்கிறானே, அவன் இதற்கு முற்றிலும் மாறானவன். ஒரு சதம் காசுகூட சீதனமாக எதிர்பார்க்கவில்லை. தான் ஏழையெனில், பெண்வீட்டுக்காரர் பரம ஏழையென்பதையும் அறிந்திருந்தான்.

இதுகூட என்னை ஆச்சரியப்படவைக்கவில்லை. அவனது பெண் தேர்வில்தான் ஆச்சரியப்பட்டுவிட்டேன்.

விசயா - வாய் பேசமாட்டாத பெண்ணல்லவா? காது வேறு கேட்காதே!

சிறப்பாக என்றில்லாவிட்டாலும், ஒரு திருமணம்போலவே அது நிகழ்ந்தேறியது. நான் திருமணத்திற்குப் போனமை அவனிற்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்திருந்தது.

திருமணத்தின்பின், அவன் வேறு வீடு மாறினான். அவனது புதியவீடு, எனது வீட்டிற்கு மிக அண்மையில் அமைந்திருந்தது. இங்கு வீடு என்று குறிப்பிட்டதை வைத்து, விசாலமான காணியொன்றினுள்- படுக்கையறை... குளியலறைகளுடன் கூடிய சீமெந்து வீடொன்றைக் கற்பனை செய்துவிட்டீர்களா? போங்கள் உங்களுக்கு உலகமே தெரியாது!

குடிசையென்ற பேர்தானே தவிர, அது குடிசையுமல்ல. அதற்குள் சமையலறை என்ற பெயரில் - குனிந்துநின்றாலும் இடிக்கும்பகுதியும்... ஒரு மனிதன் இரண்டு கைகளையும் விரித்து நிற்கமுடியாத பகுதியும், முன்பகுதி என்ற பெயரிலும் இருந்தன. இப்போது சிவராமன் நன்றாக வாழ்ந்தான் எனச் சொல்லமாட்டேன். ஏனெனில், என்னிடமே இரண்டொருதரம் கடன் வாங்கியிருந்தான். வாங்கிய கடனை அடைப்பதற்கு அதிக சிரமப்பட்டான் என்பதையும் அறிவேன்.

அவனுக்குதவ வேண்டும் என்ற விருப்பம் எனக்குள்ளும் இருந்ததுதான். இருப்பினும், என்னிடமும் பணவசதி குறைவே.

வறுமைக்குள் இருந்து மீளவேண்டும் என்ற வெறி, அவனுள் இருந்திருக்கவேண்டும். இல்லையெனில், அடுத்துச் செய்த காரியத்தைச் செய்திருக்கமாட்டான். அந்தக் காரியம்தான் அவனது முடிவுக்கும் காரணமாக அமைந்துவிட்டது.

குத்தகைக்கு வயல் எடுத்து, விதைப்பதென முடிவெடுத்து இருந்தான். வயல் விதைப்பதென்றால் சும்மாவா? பணம் வேண்டுமே! பல இடமும் கடன் வாங்கினான். இம்முறை ஏனோ தெரியவில்லை என்னிடம் வரவில்லை. வயலில் நெல் விதைத்த பின்தான், என்னிடம் வந்து சொன்னான். ஒருநாள் மாலையில் அவனது வயற்பக்கம் சென்றுபார்த்தேன். முளைவிட்டு சில நாட்களேயான அவை, மிகுந்த அழகுடையனவாக இருந்தன.

அதிக விளைச்சலைத் தரும்போல தோன்றின. இம்முறையாவது அவனைப் பிடித்திருந்த வறுமையிலிருந்து மீளவேண்டுமென மனத்திற்குள் பிரார்த்தித்துக்கொண்டேன்.

என் பிரார்த்தனை பலிக்கவில்லை. பட்டகாலில்தான் படும் என்பார்களே- இதை சிவராமன் விடயத்தில்தான் நேரில் கண்டுகொண்டேன்.



வயல் விதைப் பின்மூலம், வறுமையிலிருந்து மீண்டெழுந்து விடலாம் என எண்ணியிருந்த அவனது நினைப்பில், மண் போட்டது மழை! அந்த வருடம் பெய்ததே மழை. அது பருவமழையே அல்ல - ஊழிப்பெருமழை! எத்தனையோ வருடங்களின்பின் இப்போதுதான் இப்படியொரு மழை பெய்வதாகச் சனங்கள் பேசிக்கொண்டனர்.

மிகுதியை நான் எழுதித்தான் தெரியவேண்டும் என்ற அவசியமில்லை! வயல்கள்- நீச்சற்குளங்களாகியமை... நெற்பயிர்கள் அழுகியமை என நடந்த எல்லாமே, சிவராமனின் தலையில் இடியை விழுத்தின.

சிவராமனுக்குக் கடன் கொடுத்தவர்கள் என்ன பரோபகாரிகளா? கடனை இரத்துச்செய்யவும்... மீளளிக்கும் கால எல்லையை நீடிப்புச்செய்யவும்.

கடன் கொடுத்தவர்களின் நச்சரிப்பு ஒருபுறம்... வீட்டின் வறுமைநிலை மறுபுறம். அவனால் தலைநிமிர முடியாதநிலை. தலைநிமிரவேண்டும் என்பதற்காக அவன் செய்தகாரியம்- அவனது தலையில் பாறாங்கல்லையே போட்டுவிட்டது.

வீட்டுச்செலவுக்கும்... கடனை அடைப்பதற்காகவும் வேறு தொழில் செய்யவேண்டியநிலையில் அவன் இருந்தான். ஆயினும், அது மழைக்காலம். என்ன தொழில் செய்வது? தோட்டம் கொத்துதல்... அருவி வெட்டுதல் முதலான வேலைகளும் இல்லை.

ஒருநாள் நண்பன் ஒருவன் சொன்னான். - சிவராமனும், இன்னும் சிலருமாகச் சேர்ந்து கடலுக்குப் போவதாக. இவனுக்குக் கடலில் என்னதெரியும்? தவிரவும் இது மழைக்காலம். கடல் கொந்தளிப்பாய் இருக்கும்... புயலடிக்கும். மீனவர்களே கடலில் இறங்காதபோது, இவன் எங்கே செல்கிறான்.

சிவராமனிடம் உடனடியாகப் போகவேண்டும் என நினைத்திருந்தாலும் முடியவில்லை. மழை, எனது சொந்த அலுவல்கள் காரணமாக, மறுநாள்தான் அவனது வீட்டிற்குப் போனேன். நான் போனபோது, தனது வழமையான உடையான சிவப்புநிற சேட்டும்... சிவப்பும், கறுப்பும் கலந்த சாறமும் அணிந்திருந்தான். கடலுக்குப்போகத் தயாராகிக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் வழமைபோலவே உபசரித்தான், சிரித்துப் பேசினான்.

அவனைச் செல்லமாகக் கடிந்து, மழைகாலத்தில் கடலுக்குப் போவதிலுள்ள ஆபத்துக்களைச் சொன்னேன். கடலுக்குப்போகாமல், வேறு வேலை பார்க்கச்சொன்னேன்.

விரக்தியாய் சிரித்துவிட்டு, "என்ன மச்சான் செய்யச் சொல்லுறாய். இப்படியேயிருந்து சாகச்சொல்லுறியோ... வேற என்ன வேலைதான் செய்யிறது" என என்னைப் பார்த்தான். அவன் சொல்லுவதிலும் நியாயமிருந்தது. கடலுக்குப் போவது ஆபத்துத்தான். அவனது பிழைப்புக்குப் பணம் ஏது? எனக்குத் திரிசங்கு சொர்க்கநிலை. கடலுக்குப் போ என்றோ, நில் என்றோ சொல்லமுடியாதநிலை. கவனமாய்ப் போய் வா எனக் கூறிவிட்டுப் புறப்பட்டேன். புறப்படும்போதுதான் சிவராமன் சொன்னான் - தான் விரைவில் தந்தையாகப் போவதாக!

அடுத்து நடந்த நிகழ்விருக்கின்றதே , அதை நம்புவதற்கு உங்களுக்குச் சிரமமாயிருக்கலாம். இப்படியான முடிவுகள், கதைகளுக்குத்தான் சாத்தியம் என எண்ணியிருப்பீர்கள். ஆயினும், நீங்கள் நம்பித்தொலைக்க வேண்டியதாயிருக்கிறதே - ஏனெனில், அப்படித்தானே நடந்திருக்கிறது!

இரண்டு வள்ளங்களில், நான்கு பேர் போயிருந்தனர். போனவர்கள் போனவர்கள்தான், எவருமே கரை திரும்பவில்லை.

கடலில் வெடிச்சத்தங்கள் கேட்டன. கடற்படை தாக்கியிருக்கவேண்டுமெனப் பேசிக்கொண்டனர். எப்படியெனினும், கரை திரும்பி விடுவார்களென எதிர்பார்த்திருந்தோம்.

என் மனதுக்குள் கலக்கம் தோன்றியதென்னவோ உண்மைதான். ஒருவேளை சிவராமனுக்குக் கடவுளே! அப்படியெதுவும் நிகழ்ந்திருக்கக்கூடாது என மனமாரப் பிரார்த்தித்தேன்.

விசயாவைச் சமாதானப்படுத்துவதுதான் பெரும்பாடாகப் போய்விட்டது. எப்படியும் சிவராமன் வந்துவிடுவான் என நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தோம். கடலுக்குள் வீழ்ந்தவர்கள் ஒரு வாரம் வரையில் உயிர் பிழைத்திருப்பது சாத்தியமா? அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை பலருக்குள் இல்லாதுபோய்விட்டது. சிவராமன் வந்துவிட வேண்டுமென நான் பிரார்த்தித்துக்கொண்டிருந்தேன்.

மறுநாள் எட்டாவது நாள் - நண்பன் ஒருவன் ஓடிவந்தான். தொலைக்காட்சியில் செய்தி அறிக்கை பார்த்ததாகவும், அதில் எங்கோ வெகுதொலைவில் சில சடலங்கள் கரையொதுங்கியதென்றும், அவை அடையாளம் காணமுடியாதநிலையில் இருப்பதாகக் கூறியதாகவும் கூறினான்.

நண்பன் தகவல் சொன்ன மூன்றாம் நாள், வீட்டில் விசயா இல்லை என்ற பரபரப்பு கிளம்பியது. நானும் சென்று பார்த்தேன். அங்கு விசயா இல்லை. அவள் எங்கு போனாள் என்று எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஆளாளுக்கு ஒவ்வொரு இடமாகத் தேடியும் பலனில்லை. ஊரைவிட்டு ஓடிவிட்டதாகவும்..., அனாதை இல்லத்துக்கோ... வேறு இடத்துக்கோ போயிருக்கலாமெனவும் பேசிக்கொண்டனர். அவள் காணாமற்போன இரண்டாம் நாள் பத்திரிகை ஒன்றில் வந்த செய்தி இது.

அயல் கிராமத்தின் கடற்கரையில் இளம் பெண்ணொருத்தியின் சடலம் மிதப்பதாகவும், அவள் கர்ப்பிணிப் பெண் எனவும் இருந்தது.

**யோ.கர்ணன்**

# கிழக்கும் மேற்கும்


## ஔவையார் - சோக்கிரட்டீஸ்

அது கேட்ட பின்னரும்
அவர் கலங்கவில்லை।
அவரின் நண்பரோ
"தண்டனைக்குட்படாது
தப்பிச் சென்றிட
ஒருப்படும் வண்ணம்।।
இரந்தார் இவரிடம்।
இரந்தார் பலமுறை।।
இரந்தார் பல கூறி।
இரந்தார் பலனின்றி।।
ஞானியோ அதற்கு
இறப்பேன் விருப்புடன்।
இரக்கமாட்டேன்'' என
உறுதியாயுரைத்தார்।
இறுதியாயுரைத்தார்।।
தண்டனை வழங்கிடும்
கரிநாள் வந்தது।
தண்டனை வழங்கிடத்
தயாராக வந்தனர்।
தண்டனை ஏற்றிடத்
தயாரானார் ஞானி।।
தண்டனையாளர்
தயாராகக் கொண்ர்ந்த
கொடிய நஞ்சாம்
"ஹெம்லொக்'' தந்தனர்।
நஞ்சு நிறைந்த
கிண்ணத்தைப் பெற்றவர் –
சூழ்ந்து நின்று
கலங்கிய நண்பர்க்குக்
கலக்கம் தீர்த்திட
அறிவுரை மொழிந்தவர் –
கலக்கம் – தயக்கம்
கடுகளவுமின்றி
விருப்புடன் நஞ்சினைப்
பருகினார் முற்றிலும்।
மெல்ல மெல்ல அவர்
இறப்பினை அணைத்தார்।

கிரேக்க ஞானியின்
சீடராம் பிளேட்டோ
தன்குரு இடைவிட்ட
அரும்பெரும் பணியினை
விருப்புடன் தொடர்ந்தனர்।
அன்றிவர் படைத்த
அறிவு நூல்களை
அடிப்படையாக
அமைத்துக் கொண்டே
இன்றைய வித்தைகள்
வளர்ந்துக்கொண்டுள।
வளர்த்துக் கொண்டுள।।
இன்றைய வித்தைக்கு
அன்றுயிர் வி(தை)த்திட்ட
ஞானிதான் யாரோ?
அறிஞர்க்கு மேலான்
அறிஞர்தாம் யாரோ?
அவர் தாம்...
**SOPHRONISCUS** எனும்
பெயர் பூண்டிருந்த
கற்தச்சன் மகனாக –
**PHAENARETE** எனும்
அன்னையின் மகனாக –
ஏதென்ஸில் தோற்றிய –
'ஞானி சோக்கிரட்டீஸ்।'
ஞானியர் போற்றிடும்
ஞானியர் அவரே।
அறிஞர்கள் ஏற்றிடும்
அறிஞரும் அவரே।।
அறிவொளி பரப்பிய
அறிஞரை அழித்தனர்।
ஆனால்...
அவரொளி பரப்பிய
அறிவொளி அணையுமா?

பன்னெடுங் காலம்
இன் தமிழ்ப் பணிசெய்ய
ஔவைக்கு அருங்கனி
தந்தான் – அதியமான்
கிழக்கினில் அன்று।
ஏறத்தாழ வோர்
எழுபது ஆண்டுகள்
அறிவொளி பரப்பிய
ஞானி சோக்கரட்டீஸின்
ஆருயிர் பறித்திடக்
"ஹெம்லொக்" தந்தனர்
ஆட்சியில் அமர்ந்தோர்
மேற்கினில் அன்று।।


**குறிப்பு:**
**சோக்கிரட்டீஸ் - கி.மு.469 - 399**
**ஔவையார்**
**(சங்காலம்) - கி.பி.100 - 130**



**முருகு**

# பாதைகள்

## கவிதைச் சோலை




உலகத்தில்... பாதைகள் ஒன்று இரண்டு அல்ல நண்பா!
பலநூறு பாதைகள்.
பலகோடி பயணிகள்.
எல்லோரும் பாதையொன்றிற் செல்ல முடியாது.
எல்லோரின் பாதைகளும் ஒன்றாக முடியாது.
அவரவர்கள் தத்தமது
பாதைகளில் செல்கிறார்கள்.
அவரவர்கள் தத்தமது பாதைகள் சரியென்று
நினைத்தபடி தானே
நிதமும் நடக்கிறார்கள்.
அவரவரின் பாதைகளில் அவரவர்க்கு நம்பிக்கை
இருக்கிறது ;
அதி... சரியாய் இடஞ்சேர்க்கும் என்பதிலே
அவரவர்க்கு ஏற்ப அகத்திற் தெளிவுளது.
அவரவரின் பாதைகளைத் தெரிவுசெய்ய
அவரவர்க்குச்
சுதந்திரமும் இருக்கிறது.
சூழ்நிலையும் உதவிடுது.
சிலரோ தடுமாறித் திசைமாறி... வழிமாறி
பலநாள் அலைந்துலைந்து ஓர்
பாதைக்கு வருகின்றார்.
ஆயிரம் பாதைகள் அணிவகுத்தும்
அவரவர்தம்
பாதைகளிற் பற்றுவைக்கப் பயணம் தொடர்கிறது.
பாதைகளைத் தேர்ந்து பயணித்தல் மட்டுந்தான்...
எங்களது கைகளிலே....
இலக்கை அடைந்திடுமோ?
நடுக்காட்டில் விட்டிடுமோ? நமைப் பிழையாய் நடத்திடுமோ?
எதுவும் எம் கைகளிலே இல்லாமல்
ஏதோ... ஓர்
நம்பிக்கையோடு நம்முன்னோர் சுவடையொற்றித்
தெம்போடு நம்கால்கள் செல்கிறது.
நம்வழியே....
தம் வழியாம் என்போரின்
அரவணைப்பின் துணையிருப்பில்
அவரவரின் பாதைகளில் பயணம் சுலபமாச்சு.
என்பாதையில் நானும் பயணித்துக் கொண்டுள்ளேன்!

உன்பாதையில் நீ பயணித்துக் கொண்டுள்ளாய்!
உன்பாதை தவறென்று சொல்வதற்கோ
விமர்சித்து
'உன்பாதை எங்குசேரும்'
என்றெண்ணிக் கொள்வதற்கோ
எனக்குத் தகுதியில்லை!
அதுபோலென் பாதையினைத்
தவறென்று சொல்வதற்கோ, பழிப்பதற்கோ
உந்தனுக்குத்
தகுதியில்லை!
ஏனெனில் நம் பாதையினைத் தெரிவு செய்தல்
மட்டும் நம் கைகளிலே....
பயணம் யார் கைகளிலே...?

**த.ஜெயசீலன்**

# நூல் அகம்




"சாதி, மத, இன, வர்க்க பேதமற்ற ஒரேயொரு சமூக கட்டமைப்பான மாணவர்களை நம்பி , நாங்கள் ஆரம்பித்த பயணம் நன்றாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஈழதது இலக்கிய வரலாற்றிலே கனதியான மாற்றங்களை உருவாக்க முடியாவிட்டாலும், மாணவர்களிடத்தே இலக்கிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் ஏகலைவன் முன்நிற்கும்".... என்ற ஆசிரியரின் கூற்று, எமது கல்விச் சமுதாயத்தின் இன்றைய தேவையுணர்ந்து செயற்படும் உறுதியினைக் காட்டுகிறது. பள்ளி மாணவர் தொடக்கம் பட்டப்படிப்பு மாணவர்கள்வரை அருகிவரும் வாசிப்பு பழக்கம், இலக்கிய ரசனை, இலக்கிய ஈடுபாடு என்பவற்றை வளர்ப்பதில், கல்வி அதிகாரிகள் கொள்ளவேண்டிய அக்கறையினை ஏகலைவன் கொள்வதைக் காட்டுகிறது. மகாகவியின் 'தேரும் திங்களும்' படித்து அக்குவேறாய் விமர்சனம் செய்யும் உயர்தர வகுப்புப் பிள்ளை ஒன்றை "மகாகவி எங்கே பிறந்தார்?" என்று கேட்டால் - "எட்டயபுரத்தில்'' என்று பதில் தரும் நிலையில் உள்ளது. அல்லது "எனககுப் படிபபிக்க வில்லை'' என்று கூறுகிறது. இத்தகைய குறைபோக்க முனையும் ஏகலைவனின் பணி நீடுழி தொடரவேண்டும்.

பேர்பெற்ற கவிஞர்கள் சண்முகம் சிவலிங்கத்தின் 01.06.2003 அதிகாலையில் எழுதப்பட்ட கவிதை 'மூடலிலிருந்து...' மூடிவைத்திருக்கும் பொருள்தான் என்ன? உணர முடியாவிட்டால் பரவாயில்லை. ஊகிக்கவும் முடியவில்லை.

"வானம் கசிந்து வழிகிறது துளியாய்'' எனத் தொடங்குகிறது. ஜெயசீலனின் "கொடுப்பினை'' மழைத்துளியின் கொடுப்பினையைப் பாடுகின்ற இந்தக் கவிதை,

*"ஊரினது எல்லையிலே 'உறங்கும் கல்லறைகளினது'*
*வேர்துளிர்க்க வீழக்*
*கொடுத்துவைத்த துளிகளது*
*முகமறியாப்போதும்...'அவை வாழ்கவெனக்*
*கவிவரைவேன்"*

என்று உன்னத கொடுப்பினையைப் பாடுகின்றது. அதன் கீழ்வரும் "பலன்'' என்ற கவிதை ஒன்பது வரிகள் மாத்திரம் கொண்டது. நெரிசல் பஸ்ஸில் பாக்கியம் செய்த பயணம் பாடல்களுக்கு மட்டும்தான் என்று பாடும் கவிவரிகள் அவை.

'வந்ததும் வராததும்' என்ற தலைப்பிலமைந்த ச.முகுந்தனின் ரசனைக்கு விருந்தாகும் கவிதை ஒன்று. வந்த அழிவுகளின் கொடுமைகளின் நனவிடைத்தோய்ந்து, வராத சமாதானத்தை அங்கலாய்க்கின்றது.

*"இராமருக்கு கோயில்*
*பாபருக்கு மசூதி*
*கடவுளுக்கு?"*

என்ற ஹைக்கூ மனிதத்தின் இருப்பைத் தேடவைக்கும் ஒரு மதவாதத்தின் வரலாற்றைக் கூறுவது.

காசி ஆனந்தனின் ஹைக்கூவான சில வரிகள் துணுக்குகளாய் இடம்பெற்றுள்ளன.

*"அலுவலகத்தில் இருக்கிறவனுக்கு*
*இது குப்பைத் தொட்டி.*
*குப்பை பொறுக்கி வாழ்கிறவனுக்கு*
*இது அலுவலகம்."*

என்று அசமத்துவ சமுதாயத்தினைப் படம்பிடிக்கும் கவிதை.

*"தம்பி!*
*கம்பு, சிறுதடி கைக்கொள்*
*விளக்குமாறு தும்புத்தடி வேணாக்கு எடு*
*நாளை எம்மூர் புற்றாய் மாறுமுன்*
*நாம் தடுப்போம்."*

என்று சன்னதம் கொள்ளவைத்து, பாம்புகள் என்ற தலைப்பில், நம் சமுதாயத்தில் புதர், புற்றுக்களில் பதுங்கி, சீறிப் படமெடுத்துப் பயமுறுத்தும் பாம்புகளைப் பாடியுள்ளார் 'நரகத்து முள்' என்ற கவிஞன்.

கருணை ரவியின் 'முறிவுகள்', தாட்சாயணியின் 'விடுபடல்' இரண்டு சிறுகதைகள்.

முற்போக்கு எண்ணமுள்ள ஒரு சொக்கண்ணாவிற்கும் அந்த ஊர் கங்காணிக்குமுள்ள முரண்பாட்டைச் சொல்வதைப்போல விரிந்த கதை. இறுதியில் கங்காணி மகனுக்கு படிப்புக்கு அத்திவாரமிடும் சொக்கண்ணா, இறுதியில் யாராலும் கவனிக்கப்படாதிருப்பதாக முடிகிறது. இந்தக் கதைப்பின்னலின் நீட்சி/நீட்டி முழங்கும் தன்மை, சொல்லவந்த பொருளைச் சிதைத்துவிட்டதோ என்று சிந்திக்க வைக்கிறது.

தாட்சாயணியின் 'விடுபடல்' அவரின் வழமையான, வித்தியாசமான, மென்மையான ஒரு பார்வையின் வெளிப்பாடு. அந்தக் கதைக்கான ஆசிரியரின் படத்தெரிவு ஒரு கவிதை போன்றது. இசைக் குறியீடுகளுக்கும், ஸ்குரூட்ரைவருக்கும் உள்ள சம்பந்தம்தான், சந்தியாவுக்கும் ஏனைய பாத்திரங்களான - வினோத், அகல்யா ஆகிய அவளின் சகோதரங்களுக்கும், சிவானந்தன் என்ற அவளின் கணவனுக்கும் இடையிலானது என்பதை, ஒரு அரைமணி நேர பஸ் பயணத்தினுள்ளே சிந்தாமல், சிதறாமல் சொல்லிவைக்கும் தாட்சாயணியின் கதை - இடைக்காலத்து இளையராஜாவின் இசைபோல நெஞ்சை நிறைக்கிறது. கதையின் கருவைப் போல, கதையின் போக்கும் மென்மையாக, மனசோடு பேசுகிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கொடைஅளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும்*
*உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# சிறுமை கண்டு பொங்கும் மக்கள்

"சாது மிரண்டால் காடு கொள்ளாது" எனத் தமிழில் முது மொழி ஒன்றுண்டு. பொறுமை எல்லை மீறும் சந்தர்ப்பங்களில், பொதுமக்களும் போர்க்கோலம் கொள்வதென்பது தவிர்க்க முடியாத, நியாயபூர்வமான விடயமாகும்.

இன்றைய நாட்களில் உலகமெங்கனுமே பல்வேறு வகையிலும் அடக்கி ஒடுக்கப்படும் மக்களும், -ஆயுதமுனையில், இராணுவ வழிகளின் மூலம் அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கப்படும் அப்பாவிகளும்கூட, தமது சகிப்புத்தன்மை எல்லைமீறும் பட்சத்தில், சீறிச்சினந்தெழுந்து நியாயங்கூறிப் போராடுவதென்பது, அத்தியாவசியமான மானிட இயல்பாகவும் மாறிவிட்டது.

இப்படியான நியாயங்கோரல் போராட்டம் - சாத்வீகரீதியில் மேற்கொள்ளப்படும்போது, அதனை இராணுவரீதியில் எதிர்கொள்ள முனையும்போதுதான், பிரச்சினை சர்ச்சைக்குரியதான வன்முறைவடிவம் கொள்கிறது. வன்முறையை, வன்முறையால் எதிர்கொள்ளல் என்பது உரிமைதொடர்பான, தார்மீக நியாயம் தொடர்பான விடயங்களில் இன்றைய உலகின் ஜனநாயக நெறிமுறைகளின் பக்கச்சார்புத் தன்மை காரணமாக நியாயமான ஒன்றாக உணரப்பட்டும் வருகிறது.

இப்படிச் சொல்வது வன்முறையை நியாயப்படுத்துவதற்கல்ல. மாறாக, ஒரு தரப்பினரின் வன்முறைச் செயற்பாடுகளே... மறுதரப்பினரின் வன்முறை எழுச்சிக்குத் தூண்டுகோலாகிவிடுகிறது என்பதை விளக்குவதற்குத்தான்.

சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்வோர், தமது வசதிக்கேற்ப தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக அல்லது தமது நலன்களைப் பேணிக் கொள்வதற்காக, அதே சட்ட, ஒழுங்கு விதிமுறைகளை - மனித உரிமைகளுக்கெதிராக மீறும்போது, பாதிப்புக்குள்ளாகும் மனிதர்கள் காட்டும் எதிர்ப்புணர்ச்சியின்பாற்பட்ட நடவடிக்கைகளை, மேலாதிக்கவாதிகள்- பயங்கரவாதம் என முத்திரை குத்திவிடுவது வழக்கம்.

ஆனாலும், இந்த எதிர்ப்புணர்ச்சியானது ஒரு உயரிய மானுட இயல்பாகும். இந்த உணர்ச்சியற்றவன் நடமாடும் ஜடமாகவே இருப்பான்.

இரு தினங்களுக்கு முன்னர் யாழ்.பிரதான வீதியில், திருக்குடும்ப கன்னியர்மடம் சந்தியில் இடம்பெற்ற விபத்தொன்றின்போது, இராணுவ கனரக வாகனம் ஒன்று - மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதியதில், இருவர் ஸ்தலத்திலேயே பலியானதையிட்டுச் சீற்றமடைந்த மக்களுக்கும் - படையினர் மற்றும் பொலிஸாருக்குமிடையே கடந்த இருதினங்களாக ஏற்பட்டு வரும் மோதல்கள் மேற்குறிப்பிட்ட மனித உணர்ச்சியின்பாற்பட்டதேயாகும்.

இராணுவம் கடந்த சில தசாப்தங்களாகவே தமிழ்மக்களின் கடும்வெறுப்பையும், மறைத்து அடக்கப்பட்ட கோபத்தையும், தமது இரக்கமற்ற கொடிய யுத்தநடவடிக்கைகள் மூலம் சம்பாதித்து வைத்துள்ளமை தெரிந்தவிடயமே.

வடக்கு - கிழக்கின் எந்தப் பக்கம் திரும்பினாலும் - தென்படும் போரின் வடுக்களும், தாக்கங்களும், இழப்புக்களும், துயரங்களும், பாதுகாப்புப் படையினர் என்று வர்ணித்துக் கூறப்படும் அரச படைகள் மீதான சினத்தை, மக்களுக்கு அன்றாடம் கிளர்ந்தெழ வைத்தவண்ணமேயுள்ளது.

மௌனமாக ஆழ்மனத்தில் கனன்று கொண்டிருக்கும் இந்த வெஞ்சின உணர்வு, பொறுக்கமுடியாத வேகங்கொள்ளும் போதே - கடந்த இருதின மோதல் நிகழ்வுகள் போன்ற சம்பவங்கள் கொழுந்துவிட்டெரியத் தொடங்குகின்றன.

விபத்து என்பது எப்போது, எப்படி, எதனால், ஏன் நடைபெறுகின்றது என தெரியாமல் நடைபெறும் ஒன்றேயாகும். விபத்து என்பது நடந்தபின்னால் தான் உணர்ந்துகொள்ளக் கூடிய ஒன்றுமாகும்.

இந்த விபத்தும் அப்படித்தான். விபத்தின்போது, இரு இளம் உயிர்கள் பலியாகியுள்ளன என்பது உணர்ச்சிபூர்வமான ஒரு விடயமாகும். இதன்போதான பதட்டநிலையைப் படைத்தரப்பு மனிதாபிமானத்துடன் - சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளை மதித்து, இயல்பாக இராணுவத் தன்மையற்ற முறையில் கையாண்டிருக்கமுடியும்.

அவர்கள் தரித்திருந்த சீருடையும், வைத்திருந்த ஆயுதங்களும் - அதிகார தோரணையுடன் மக்களின் உணர்வுகளை உதாசீனம் செய்து, தமது நலன்களைப் பாதுகாக்கும் மனோவேகத்துடன் அவர்களைச் செயற்படவைத்தமையே, மக்களின் சிறுமை கண்டுபொங்கும் சுபாவத்தைச் சீற்றம்கொள்ள வைத்தது.

மக்கள் உணர்வெழுச்சியை, கோபத்தை, வெறுப்பை, மோதலுணர்வை - கண்ணீர்ப்புகைக் குண்டை ஏவியும், துப்பாக்கி ரவைகளைப் பயன்படுத்தியும், வேறும்பல அடக்குமுறை உத்திகளைக் கையாண்டும் இராணுவம், தனது இராணுவத்தனத்தைக் காட்டமுயன்றது ஒரு அணுகுமுறை அநாகரிகமேயாகும்.


இதுவே மக்கள் தம்மைப் பாதுகாக்க, தமது எதிர்ப்பை வெளிப்படுத்த, இராணுவம் மற்றும் பொலிஸாருக்கெதிராக மோதலை மேற்கொள்ள நிர்ப்பந்தித்தது, மறியல் போராட்டத்தில் ஈடுபடவைத்தது, கற்களை வீசவைத்தது.

மக்களின் இந்த நடவடிக்கையை வன்முறை என்று கூறிவிட முடியாது. இது ஒரு போராட்ட வடிவமேயாகும்.

இராணுவம் மற்றும் பொலிஸாரின் அடாவடித்தனங்கள்தான போர்நிறுத்த மீறலகளாகும். இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளைப் படைத்தரப்பிறகு எதிராக மேற்கொள்வது அவசியமாகும்.

இல்லையேல், மக்களின் வெஞ்சினம் மற்றொரு வெங்களத்தைத் தோற்றுவிக்கும் சூழலை உருவாக்கிவிடும் என்பதில் ஐயமில்லை. இப்படிப்பட்ட படைத்தரப்பு நடவடிக்கைகள், சமாதான சூழலை வெகுவாகப் பாதித்து, சிதைத்துவிடும் எனவும் அறிவுறுத்துகிறோம்.

## நாடும் நடப்பும்




### ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட

# தமிழ் மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வு; தேசிய, வலய மட்டத்தில் பரிசு பெறுவோர்!

உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு - தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ் வளர்ச்சிக் கழகமும் இணைந்து வடக்கு - கிழக்கு, மலையக பாடசாலைகளுக்கிடையே நடத்திய தமிழ்மொழி எழுத்தாக்கத் திறன் தேர்வு முடிவுகள், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் ஆகக்கூடிய மதிப்பெண்ணைப் பெற்ற முதல் மூவருக்கும் 1,000 ரூபா பணப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படவிருக்கின்றன. அடுத்த நிலையில் உள்ள இருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உலக ஆசிரியர் நாளான இன்று - பரிசும், சான்றிதழும் பெறத்தக்கதாக குறித்த கல்வி வலயங்களுக்கு இவை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தேசிய நிலையிலும், வலய நிலையிலும் பரிசு பெறுபவர்களினதும், சான்றிதழ் பெறுபவர்களினதும் விபரம் வருமாறு,

### தேசிய மட்டம்

பி.யோகராசா (சம்மாந்துறை இரணமடு இந்து ம.வி.), கா.ஜெகதீஸ்வரி (யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி), சி.விசுவாசம் (கிளி/ பூநகரி ம.வி.), திருமதி க.சிறீதரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.ஜீவரஞ்சினி (கிளி/ வட்டக்கச்சி ம.வி.).

### வலய மட்ட முடிவுகள்

***யாழ்ப்பாண வலயம் :***

சு.வைகுந்தநாதன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), பு.விஸ்வதேவி (வேம்படி மகளிர் கல்லூரி), நா.புவனேந்திரன் (யா/மத்திய கல்லூரி), செ.சத்தியபவானி (யா/பெரியபுலம் ம.வி.), ம.ரங்கநாதன் (ஆவரங்கால் நடராசா வித்தியாலயம்),

***வலிகாமம் வலயம் :***

கா.சசிதரன் (யா/அருணோதயாக் கல்லூரி), பூ.ஜெயமலர் (யா/விக்ரோறியாக் கல்லூரி), த.தயானந்தன் (யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.), சு.சிறீக்குமரன் (யா/ஏழாலை சிறி முருகன் வித்தியாலயம்), ம.கலைவாணி (யா/இராமநாதன் கல்லூரி).

***வடமராட்சி வலயம் :***

து.ஜெயதேவன் (யா/வெற்றிலைக்கேணி ம.வி.), து.அருந்தவசீலன் (யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை), கி.தர்மலிங்கம் (யா/ஞானசாரியார் கல்லூரி), செல்வி ஆ.கந்தசாமி (யா/ நாகர்கோவில் ம.வி.), த.முரளிதரன் (யா/உடுப்பிட்டி அ.மி.).

***தென்மராட்சி வலயம் :***

ம.மகேசன் (யா/வீரசிங்கம் ம.வி.), வி.மகேந்திரன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அ.மனோரஞ்சிதன் (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), க.ஈஸ்வரன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி சந்திரதேவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி க.சிறிதரன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

***தீவக வலயம் :***

யோ.பங்கயற்செல்வி (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.வி.), அ.மனோகரன் (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.வி.), கு.ஆனந்தகௌரி (யா/சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.), ந.கணேசமூர்த்தி (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.வி.), சு.சுமதி (யா/சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி.),

***கிளிநொச்சி வலயம் :***

அ.அருளாம்பிகை (கிளிநொச்சி மத்தியகல்லூரி), க.தமிழ்ச்செல்வி (கிளி/ அழகாபுரி ம.வி.), அ.இரஞ்சிதமலர் (கிளி/ இந்துக் கல்லூரி), செ.வளர்மதி (பரந்தன் அ.த.க. பாடசாலை), இ.செல்வநாயகி (கிளி/ தருமபுரம் ம.வி.),

***முல்லைத்தீவு :***

த.மேரி சுகி (மு/முல்லைத்தீவு ம.வி.), ப.நாகநளினி (மு/விசுவமடு ம.வி.), சி.குணபாலன் (மு/தேவிபுரம் அ.த.க பாடசாலை), அ.தயா (விசுவமடு ம.வி), இ.ஜெகதாசன் (மு/ விசுவமடு ம.வி.).

***துணுக்காய் வலயம் :***

மு.வைத்திலிங்கம் (முத்தையன் கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை), இ.இன்பதாஸ் (மு/பாலிநகர் ம.வி), செ.சந்திராகலா (மு/ திருமுறிகண்டி இ.த.க. பாடசாலை), க.முருகேசு (மு/வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க. பாடசாலை), சி.ஜெயநிதி (மு/தேறாங்கண்டல் அ.த.க பாட சாலை),

***மடு வலயம் :***

கி.கெலின்றோஸ் (மன். தேவன்பிட்டி றோ.க. பாடசாலை), திருமதி தே.செபஸ்ரின் (மன். ஆண்டான் குளம் றோ.க. பாடசாலை), செ.ப.விமலதாஸ் (மன். கருவாங்கண்டல் றோ.க.) திருமதி பு.சிவகுமார் (பெரியமடு ம.வி.).

***மன்னார் வலயம் :***

க.றெஜினா (மன். பேசாலை பற்றிமா ம.வி.), து.இராமதாஸ் (மன். சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி), திருமதி றே.இராமதாஸ் (மன். புனித லூசிய ம.வி.) திருமதி அ.தியுற்றியஸ் பீரிஸ் (மன்னார் செண். ஆன்ஸ் ம.வி.), திருமதி வ.ஜெகநாதன் (மன். முருங்கன் ம.வி.).

**வவுனியா வலயம் :**

ப.ஜெயகௌரி (வவுனியா புதுக்குளம் ம.வி.), தெ.ராஜேஸ்வரி (வவுனியா புதுக்குளம் ம.வி.), செ.பஞ்சநாதன் (வவுனியா தாணிக்குளம் கணேசா வித்தியாலயம்), கா.துணைவன் (வவுனியா புதுக்குளம் ம.வி.), சி.சுந்தராம்பாள் (வவுனியா ரம்பைக்குளம் மகளிர் கல்லூரி).

ஐ.கதிர்காமசேகரன் (வவு. வவுனியா ம.வி.), த.நிறைமதி (வவுனியா சைவப்பிரகாச ம.வி.), இ.சறோஜாதேவி (வவுனியா இந்துக் கல்லூரி), ற.அரசனார் (வவுனியா மதீனா முஸ்லிம் வித்தியாலயம்), திருமதி நிரோமி குரூஸ் (வவு. ரம்பைக்குளம் மகளீர் ம.வி.).

### கிழக்கு மாகாணம்

***திருகோணமலை வலயம் :***

க.சந்திரகுமாரி (திருகோணமலை செண்மேரிஸ் கல்லூரி), கு.கம்சத்வதனி (திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி), சி.செல்வராசா (திருகோணமலை இ.தி.ச. சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரி), ஜெ.மதிவதனி (திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலயம்), க.முரகசுந்தரி (திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி),

***கந்தளாய் வலயம் :***

மு.மர்ஜானி உம்மா (திருமலை போராற்று வெளி ம.வி.), பொ.சுகந்தினி (திருமலை போராற்று வெளி பரமேஸ்வரா வித்தியாலயம்).

***மூதூர் வலயம் :***

கி.கணேசலிங்கம் (திருகோணமலை கிளிவெட்டி ம.வி.), எம்.ஐ.றகமத்துல்லா (திருகோணமலை கிண்ணியா அல் - அ.்.ச ம.வி.), எச்.எம்.கலால்தீன் (திருகோணமலை அல்மினா ம.வி.).

***பட்டிருப்பு வலயம் :***

திருமதி ச.விநாயகமூர்த்தி (குமரன்வெளி சிவசக்தி வித்தியாலயம்), க.பிரபாகரன் (தும்மன்கேணி கண்ணகி வித்தி.), ச.தட்சணாமூர்த்தி (மட்டு. அபிலாந்துறை கலைமகள் வித்தியாலயம்), சு.மதிமோகன் (மட்டு. முனைத்தீவு ம.வி.), திருமதி தே.கந்தசாமி (மட்டு. பட்டிருப்பு மத்திய ம.வி.).

***மட்டக்களப்பு வலயம் :***

செ.சிவானந்ததேவன் (மட்டு. புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்), வே.தட்சணாமூர்த்தி (மட்டு. புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம்), திருமதி ச.அம்பலவாணர் (மட்டு. மீரா பாலகா ம.வி.), ச.மணிசேகரன் (மட்டு. மஞ்சத்தொடுவாய் பாரதி வித்தியாலயம்), சந்திரசேகரன் (மட்டு. கிரான்குளம் விநாயகர் வித்தியாலயம்),

***கல்குடா வலயம் :***

ப.வாணி (மட்டு. செங்கலடி மத்திய கல்லூரி), எம்.ஐ.கைதர் அலி (மட்டு. காவத்தைமுனை அல்.அமீன் வித்தியாலயம்), எ.ஜெயரஞ்சனி (மட்டு. கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தி.), ம.இன்பமலர் (மட்டு. வாழைச்சேனை இந்துக் கல்லூரி), பி.பவானந்தலிங்கம் (மட்டு. வாழைச்சேனை இந்துக்கல்லூரி).

***கல்முனை வலயம் :***

அ.குமரநாதன் (கல்முனை விபுலானந்தர் மத்திய கல்லூரி), சி.நற்குணசிங்கம் (கல்முனை பெரிய நீலாவினை விஸ்ணு ம.வி.), திருத்தி மெய்யழகன் (கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி), க.தவராசா (கல்முனை இ.கி.மி. ம.வி.), எம்.பஹீறுத்தீன் (கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரி).

***அக்கரைப்பற்று வலயம் :***

வி.சின்னத்தம்பி (அக்கரைப்பற்று தம்பிலுவில் ம.வி.), த.தவராசா (அக்கரைப்பற்று கோணாவில் ம.வி.), நா.ஜெகதீஸ்வரி (அக்கரைப்பற்று தம்பிலுவில் ம.வி.), மனோரதி (அக்கரைப்பற்று திருக்கோவில் குமர வித்தியாலயம்), ஜெ.கனகமணி (அக்கரைப்பற்று தம்பிலுவில் ம.ம.வி.).

***சம்மாந்துறை வலயம் :***

க.கௌரி (சம்மாந்துறை விபுலானந்த ம.வி.), திருமதி ஜெ.சந்திரசேகரன் (சம்மாந்துறை வேம்படித் தோட்டம் வாணி வித்தியாலயம்), ஆர்.ரெட்ணப்பிரியா (சம்மாந்துறை விவேகானந்தா ம.வி.), பி.யோகராசா (சம்மாந்துறை நாணமடு இ.ம.வி.).

(02 ஆம் பக்கம் பார்க்க)


# இழந்துவிட்ட சமூக அந்தஸ்த்தை

# ஆசிரியர்கள் திரும்பப் பெறவேண்டும்

**இன்று உலக ஆசிரியர் தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கங்கள் பிரசுரமாகின்றன.**

ஆசிரியத் தொழிலானது தொன்மையானதும், நவீனத்துவம் அடைந்துவரும் துறையாகவும் காணப்படுகிறது. அர்ப்பணிப்பும், மேன்மையும் கொண்ட ஆசிரியர்களுடைய தினமாகிய ஒக்ரோபர் 6 ஆம் திகதியை, உலகிலுள்ள சுமார் இரண்டு கோடி ஆசிரியர்களும் தம் சேவையின் முக்கியத்துவத்தையும், பொறுப்பையும் நினைவு கூர்ந்து, உறுதிமொழி எடுத்துக்கொள்ளும தினமாகவும் கொண்டாடுகின்றனர். அதேவேளை, அணையாத தீபங்களாகவும், ஞான விளக்குகளாகவும் மிளிர்ந்து, உருகிவிட்ட ஆசிரியர்களை நினைவுகூரும் தினமாகவும் இந்தத் தினம் அமைகின்றது.

இந்த பொன்னான நாளில் சிறப்புப் பெற்று விளங்கும் ஆசிரியத்துவம், இன்றைய சமுதாயத்தில் எந்தளவு அந்தஸ்த்துப் பெறுகிறது என்பதையும், அதற்கு பண்டைய காலங்களில் எவ்வாறான மதிப்பும், மரியாதையும் வழங்கப்



பட்டது என்பதையும் சிந்தனைக்குரிய விதத்தில் ஆராய்ந்து பார்த்தால்,

ஆசிரியர்கள் ஒருவகையில் மாணவர்களின் பெற்றோர்களாகக் கருதப்படுவதனால், அவர்களுக்குக் கூடிய பொறுப்புகளும், கடமைகளும் காணப்படுகின்றன. மாணவரின் கல்விக்கு வகைகூற வேண்டியவர்கள் ஆசிரியர்களே ஆவார்கள். "ஒரு நாட்டின் ஆசிரியர்கள் எத்தரத்தினரோ, அத்தரத்தினதே அந் நாடு'' என்று கூறப்படுமளவிற்குப் பிள்ளைகளின் ஆளுமையை வடிவமைத்து, கற்பித்தலில் ஈடுபட்டு, கல்வியின் குறிக்கோளை மாணவர் ஊடாக அடையவைத்து, அவர்களைச் சமுதாயத்திற்கு உதவுபவர்களாகவும், பொருத்தப் பாடுடையவர்களாகவும் மாற்றியமைப்பது ஆசி ரியர்களுடைய பிரதான கடமையாக அமை கின்றது.

### முன்னையகால ஆசிரியரும், சமூக அந்தஸ்த்தும்

முன்னைய காலங்களில் ஆசிரியர்களுக்குச் சமூகத்திலே சிறந்த இடம் வழங்கப்பட்டிருந்தது. 'சட்டம்பியார்' என்று அழைக்கப்பட்ட ஆசிரியர், சமூகத்தில் கூடியளவு இணைந்து செயலாற்றிய தன்மை காணப்பட்டது. இதன் காரணமாக ஆசிரியர்களின் மட்டில் கூடிய மதிப்பும், மரியாதையும் பேணப்பட்டு வந்தது. இது தவிர, பண்டைய காலங்களில் ஆசிரியரின் மதிப்புக் கூடிக் காணப்பட்டமைக்குப் பின்வரும் காரணிகளும் சாதகமாக அமைந்திருந்தன.

முன்னைய காலங்களில் - கல்வியைப் பெறுவதற்கான வழிகளும், கல்விக்கான ஏற்பாடுகளும் குறைவாகவே காணப்பட்டன. இதன் காரணமாக சமூகம் கல்வியைப் பெறுவதற்காக, பாடசாலைகளை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது. இதனால், ஆசிரியர்கள் அன்று கதாநாயகர்களாக விளங்குவதற்கும், செயற்படுவதற்கும் ஏதுவான நிலை காணப்பட்டது எனலாம்.

ஆசிரியர்களின் நிரம்பல் குறைவாகக் காணப்பட்டமையால், அவர்களுக்கான கேள்வியும், மதிப்பும் பேணப்பட்டு வந்தது. ஏனெனில், நிரம்பல் குறைவான பொருளின் கேள்வியும், விலையும், மதிப்பும் அதிகரித்துக் காணப்படுமென்பது பொருளியற் கருத்து. முன்னைய காலங்களில் ஊரிலோ அல்லது கிராமத்திலோ குறைந்தளவு ஆசிரியர்களே காணப்பட்டனர்.

ஆசிரியர்கள் கூடியளவு சமூகத்துடன் இணைந்தும், ஒன்றியும் செயற்பட முற்பட்டனர். சமூகத்தின் மூலை முடுக்கெல்லாம் ஆசிரியர்களின் செயற்பாடு ஊடுருவிக் காணப்பட்டது.

முன்னைய ஆசிரியர்களின் பாடசாலை வேலைப்ளு ஒப்பீட்டளவில் தற்போதைய ஆசிரியரின் செயற்பாட்டிலும் குறைவாகக் காணப்பட்டமையால், ஆசிரியர் சமூகத்தின் செயற்பாடுகளிலும், அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளை தீர்க்கும் விடயங்களிலும் ஊக்கத்துடனும் செயற்பட வாய்ப்பு ஏற்பட்டது.

ஆசிரியர்கள் தம்முடைய சமூக அந்தஸ்த்தைப் பாதிக்கும் விடயங்களைச் சரிவர இனங்கண்டு, அதற்கேற்பச் செயற்பட்டனர். கல்வியைப் பெறவும், அறிவுசார் விடயங்களைப் பெற்றுக்கொள்ளவும் மாணவர் - ஆசியரைத் தேடிச்செல்லும் தன்மை பேணப்பட்டு வந்தது.

கல்வியில் அக்கறையும், வேட்கையும் கொண்ட சமூகம் காணப்பட்டதுடன், தமிழர்களின் பாரம்பரியப் பழக்கமான பெரியோரைக் கனம் பண்ணும் கலாசாரம் இறுக்கத்துடன் பேணப்பட்டும் வந்தது.

நாட்டின் கல்விக்குப் பாதகமாக எதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய கலாசாரமோ அல்லது அதன் உக்கிரதன்மையோ அன்றைய சமூகத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை.

இவ்வாறான பல காரணிகள் ஆசிரியர்கள்-சமூகத்தின் மதிப்பையும், அந்தஸ்த்தையும் பெறுவதற்குக் காரணங்களாக அமைந்தன எனலாம்.

### இன்றையகால ஆசிரியரும், சமூக அந்தஸ்தும்

இன்று ஆசிரியத் துறையானது, முன்னரை விட, நவீனத்துவமடைந்து பல புதிய திட்டங்கயையும், உத்திகளையும் முன்னெடுப்பதாக விளங்குகிறது. திட்டமிடப்பட்ட கல்வியை வகுப்பறைகளினூடாக முன்னெடுத்துக் கல்வியின் இறுதி இலக்கை அடைய மாணவர்களை வழிப்படுத்திச் செயற்படவைக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடமே காணப்படுகின்றது. காலத்திற்குக் காலம் அறிமுகமாகும் கல்விச் சீர்திருத்தங்களின் வெற்றி, தோல்வியின் பின்னால், ஆசிரியர்களே காணப்படுகின்றனர். ஆயினும், இன்றைய காலகட்டங்களில் ஆசிரியர்களுக்குச் சமூகமட்டத்தில் அந்தஸ்தும், முன்னிலையும் குறைந்து வருவது கவலைக்குரிய விடயமாகும். இதற்குப் பல காரணங்கள் அடிப்படையாக அமைந்தபோதிலும், அதற்குச் சில ஆசிரியரும், அவர்களது செயற்பாடுகளும் காரணமாக அமைவது வேதனைக்குரிய விடயமாகும். எனவே, அவ்வித குறைகளை ஆசிரியர்கள் திருத்திக்கொண்டு, நல்ல சிந்தனையுடனும், புதுத்திட்டமிடலுடனும் செயலாற்றச் சில ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஆசிரியர்கள் தம்முடைய கல்வித்தரத்தையும், தொழிற்தகுதியையும் அதிகரித்து, தம்முடைய வாண்மையைப் பெருக்கி, சமூகத்தில் மற்றவர்களைவிட ஒருபடி மேல்நிலையைப் பெற முயற்சிக்கவேண்டும். மாறும் உலகில் ஏற்படும் சகல மாற்றங்களையும் தம்வசப்ப டுத்தி, பூரண விளக்கங்களைப் பெற்று, சவால்களை எதிர்கொள்ளவேண்டும். ஒரு துறையில் மட்டும் தேங்கிக்கிடக்காது, அனைத்து துறைகளிலும் காத்திரமான அறிவைப்பெற்று, வினைத்திறனுடன் செயலாற்ற வேண்டும்.

சமூகம் ஆசிரியர்களின் தரத்தை அளவிடப் பயன்படுத்தும் மதிப்பீட்டுக் கருவி யாக ஆளுமை விளங்குகின்றது. எந்தவொரு ஆசிரியரும் தம்முடைய ஆளுமைப்பண்புகளை விருத்திசெய்து கொள்வதன்மூலம், சமூகத்தில் உன்னத இடத்தைப்பெற்றுக்கொள்ள முடியும்.


ஆசிரியர்களுக்கான பொறுப்பும், கடமைகளும் பல உள்ளதால், தம் பொறுப்புணர்ந்து, செயற்படுதல் முதற் கடமையாகக் கொள்ளப்படுகின்றது.

தன் தொழிலில் பூரண விருப்பும், தொழிலில் திருப்தியும் அடையும் மனப்பக்குவத்தை ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றுக்கொள்ளவேண்டும். பாடசாலையில் ஆசிரியர்களின் காத்திரமான செயற்பாடு, சமூகத்தில் நற்பிரதிபலிப்பைத் தரும் என்பது பொதுக்கருத்து. எனவே, மாணவர் விரும்பும் ஆசிரியராகவும், நல்லாசிரியராகவும் செயலாற்ற, ஆசிரியர் சார்பான உரிமைகளை ஆசிரியர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

சமூகத்திற்கு ஒவ்வாத அல்லது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத எந்த நடவடிக்கைகளிலும் ஆசிரியர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாகாது.

பல சமூகங்களினது உறவுச் சங்கமமாய் பாடசாலை விளங்குகின்றது. ஆயினும், பாடசாலைகளில் ஆசிரியர்கள் பல மாறுபட்ட கருத்துக்கொண்ட பிரிவுகளாகப் பிரித்து, தனிவழியில் செயற்படுவது வேதனைக்குரியது. பாடசாலையின் ஆரோக்கியமான சூழலை அது வெகுவாகப் பாதிக்கும். அத்துடன், ஆசிரியர்கள் அதிகாரப் போட்டிகளில் ஈடுபடுவது- பாடசாலையை மட்டுமன்றி, முழுச்சமூகத்தையுமே பாதிக்கும் ஒருபொறியாக அமைவதுடன், ஆசிரியரின் சமூக அந்தஸ்தையும் முற்றாகப் பாழ்படுத்திவிடும். எனவே, கூட்டுணர்வுடன் செயலாற்ற ஆசிரியர்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆசிரியர்கள் தம்மை நிர்வகிக்கும் கல்விசார் அதிகாரிகள் மட்டில் மதிப்பும், மரியாதையும் உடையவர்களாகச் செயற்படவேண்டும். அதேவேளை, ஆசிரியர்களுடைய உரிமைகள், சலுகைகள் என்பவற்றில் அதிகாரிகள் கூடியகவனம் செலுத்தி, ஆசிரியர் நலன்களுக்



காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். ஆசிரியர்களை மதிப்பும், மரியாதையும் உள்ளவர்களாக நினைத்து பழகவேண்டும்

எப்போதும் மாணவர் - ஆசிரியரைக் தேடியே கல்வியைப் பெறும்நிலை காணப்படவேண்டும். ஆசிரியர் மாணவனைத் தேடிச் சென்று கற்பிக்கும்நிலை ஏற்படாவண்ணம் ஆசிரியர்கள் செயற்பட்டுக்கொள்ளவேண்டும்.

ஆசிரியர்கள் அனைவரும் தம்முடைய செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் தாமே சுயமதிப்பீடு செய்வதன்மூலம், தம்முடைய தவறுகளை தாமே சீர்செய்யும்நிலை ஏற்படுவதனால், அவர்களின் செயற்பாட்டில் ஒரு உறுதித்தன்மையும், வினைத்திறனும் பேணப்படும்.

இவ்வாறாக ஆசிரியர் தம் அந்தஸ்தை உயர்த்திக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் சிறப்பானதாக அமையும்.

இது தவிர, ஆசிரியர்களது தனிப்பட்ட செயற்பாடுகளுக்குப் புறம்பான சிலகாரணிகளும், ஆசிரியர்களின் சமூக அந்தஸ்தை இன்று பாதிப்பனவாக அமைகின்றன. அவை யாவும் சீர்செய்யப்படவேண்டியது காலத்தின் தேவையாகும். அவையாவன -

காலத்திற்குக் காலம் அரசுகளால் பின்பற்றப்படும் ஆசிரியர் ஆட்சேர்ப்புக் கொள்கைகளும், ஆசிரியர்களுக்கான நிரந்தரக் கொள்கை இல்லாமையும் முக்கிய காரணமாக அமைகின்றன. வேலையற்றவர்களுக்கு வேலை வழங்கும் தொழிலாக ஆசிரியத் தொழில் மாறிவருகிறது. வேலைவாய்ப்பின் போது, தகுதிக்கும், தரத்துக்கும் முன்னுரிமை வழங்குதல் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இன்றைய நவீன உலகில் கல்வியைப் பெறுவதற்கான வசதிகளும், வாய்ப்புகளும் பரவிக் காணப்படுகின்றமையும், பொருளாதாரமே கல்வியைத் தீர்மானிக்கும் நிலையும், ஆசிரிய அஸ்தஸ்து மட்டில் பாதகமான விளைவை ஏற்படுத்துவதாக உள்ளது.

ஆசிரியர் பற்றிய பிழையான கண்ணோட்டமும், மாற்றமடையும் உலகில் உருவாகி வரும் ஒரு புதிய கலாசார சூழலும், வெளிநாட்டு கலாசாரமும், வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி பயிலக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளமையும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் ஆசிரியர்களின் சமூக அந்தஸ்தைக் குறைக்கின்றன.

தற்போது தோன்றியுள்ள சினிமா கலாசாரத்தில் - ஆசிரியர்கள் பற்றிய பிழையான சித்திரிப்புகளும், தரங்குறைவான வார்த்தைகளும், ஆசிரியர்களுக்கெதிராகக் காட்சிகளில் வரும் குறும்பு நடவடிக்கைகளும் - ஆசிரியர் பற்றிய பிழையான வழிகாட்டலை மாணவருக்கு ஏற்படுத்திவிடுகின்றன. அவற்றை இன்று ஆசிரியர்களுக்கு எதிராகப் பரீட்சித்தப் பார்க்க ஒரு சமூகம் தோற்றம்பெற ஆரம்பித்துள்ளமையும், ஆசிரியர் மதிப்புக் குறையக் காரணமாக அமைகிறது.

எது எவ்வாறாயினும், தற்பொழுது வலுவிழந்து, மதிப்பிழந்து போகும்நிலையில் உள்ள ஆசிரியத்துக்கான சமூக அந்தஸ்தை, உலகமே போற்றும் நிலை அடையவைக்கும் பொறுப்பு ஆசிரியம் என்ற பதவியில் வேடம் தரித்துள்ள ஆயிரம் ஆயிரம் ஆசிரியர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க, ஆசிரியர்கள சேவை மனப்பான்மையோடும் , தன்னலமற்ற மனப்பாங்குடனும் செயற்படுவார்களேயானால், இந்தச் சமூகம் என்ன, இவ்வுலகமே அவர்களைப் போற்றிப்புகழும் என்பது திண்ணம்.

அதேவேளை, சமூகத்தினை மாற்றியமைக்கக்கூடிய திறன்கொண்டவர்களும் ஆசிரியர்களே என்றால் மிகையாகாது.

**வி.இ.ஹஸ்ரன் றோய்**
**யா/தம்பாட்டி அ.த.க.வி**

# ஏணியையொப்பார் ஆசிரியர் தான்!

குருகுலத்திற் சென்றிருந்து கல்விகற்ற அந்நாளைக்
கருத்தினிலே நினைவூட்டிப் பார்!

அந்நாளைப் போலன்றி இந்நாளில் பள்ளிசென்று
அறிவு பெறும் நிலையெண்ணிப் பார்!

பெற்றோருக் கடுத்தாற்போல் நல்வழியும் நல்லறிவும்
கற்பிப்பவர் ஆசிரியர் தான்!

ஆசிரியரைப் போற்றும்நாள் அக்டோபர் ஆறாம் நாள்
ஆசிரியர் தினம் அதுவென் றறி!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருக்கும் வழிமுறையை
அறியவைத்தல் ஆசிரியர்க் கழகு!

கலைகளினைக் கற்றவற்றில் தெளிந்தறிவு பெறுவதுமோர்
பண்பிலுயர் ஆசிரியர்க் கழகு!

கற்றறிந்த அறிவையெல்லாம் கற்கவரும் மாணவர்க்குக்
கற்பித்தல் நல்லாசிரியர்க் கழகு!

பக்கச்சார்பில்லாது தராசினைப்போல் நடுநிலையும்
பண்பிலுயர் ஆசிரியர்க் கழகு!

கற்கவரும் மாணவரின் நிலையறிந்து கற்பித்தலே
கற்றறிந்த ஆசிரியர்க் கழகு!

இறைபக்தி குருபக்தி சற்றுமின்றிக் கல்விகற்போர்
விழியிருந்தும் பார்வையற்றோர் அறி!

விண்வெளியிற் சென்றங்கு சாதனைகள் விளைப்பவர்க்கும்
வித்திட்டவர் ஆசிரியர் தான்!

அறிவொளியை ஏற்றிவைத்தெம் அகத்திருளை ஓட்டுவதே
ஆசிரியர் இயற்றும் பணி!

அகத்திருளை அகற்றியெம்மை அறிவுலகில் உயர்த்துவதே
ஆசியரியர் இயற்றும் பணி!

தம்முயர்ச்சிக் குழைக்காது கற்குமெம்மை உயர்த்துவதால்
ஏணியையொப்பார் ஆசிரியர் தான்!

கற்றவற்றை மாணவர்க்குக் கற்றுத்தர மற(று)ப்பவர்கள்
காட்டில்நச்சு மரமாவார் அறி!

மலர்மாலை சூட்டுவதால் அன்பளிப்புக் கொடுப்பதனால்
ஆசிரியர் மகிழ்வாரோ சொல்?

ஆசிரியரின் அறிவுரையை மறந்தவரைத் துதிப்பதனால்
ஆசிரியர் மகிழ்வாரோ சொல்?

ஆசிரியர்தம் அறி(ற)வுரையை ஏற்றுநாம் ஒழுகக்கண்டே
ஆசிரியர் மனமகிழ்வார் அறி!

ஆசிரியர் மனம்நிறைந்து எமை வாழ்த்தும் வண்ணம்நாம்
ஆசிரியர் வழிநடப்போம் என்றும்!

ஆண்டிலொரு தினத்தில் வரும் ஆசிரியர் தினத்தில் மட்டும்
துதிப்பதனால் பயனுண்டோ சொல்?

எதிர்வரும் ஆண்டெல்லாம் அக்டோபர் ஆறென்றே
ஒழுகுவதே எங்கள் கடன்!

**வயலூர் முருகன்**

### சிரியாவின் எல்லைப் பிரதேசத்தில் அமைந்திருந்த

# முஸ்லிம் போராளிகளின் முகாம் மீது இஸ்ரேலியப் படையினர் தாக்குதல்!



(ஜெருசலேம்)

சிரியாவின் எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ள முஸ்லிம் போராளிகளின் பயிற்சி முகாம் ஒன்றின் மீது நேற்றைய தினம் இஸ்ரேல் படையினர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இஸ்லாமிய ஜிகாத் இயக்கத்தினர் இஸ்ரேலின் கைபா நகரில் அமைந்துள்ள விடுதி ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் 19 இஸ்ரேலியர்கள் பலியானதன் எதிரொ லியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

கமாஸ், ஜிகாத் ஆகிய முஸ்லிம் போராளி அமைப்புக்கள் தமது பயிற்சிக்காக இந்த முகாமை உபயோகித்துவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், இஸ்ரேல் தாக்குதல் நடத்திய இடம் பலஸ்தீன அகதிகள் குடியிருப்பு என சிரியப் பத்திரிகைகள் தெரிவித்தன.

இதேவேளை - பலஸ்தீனத் தலைவர் அரபாத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை இஸ்ரேல் அமைச்சர்களிடையே வலுவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரபாத்தை வெளியேற்ற எடுக்கும் முயற்சிகள் எதனையும் உடன் செயற்படுத்தப் போவதில்லை எனவும், ஆனால் அவரை வெளியேற்ற எடுக்கும் முயற்சியின் விளைவு அவரின் மரணமாக அமையலாம் எனவும் இஸ்ரேலிய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்ததாக பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே, அரபாத்தின் இருப்பிடமான ரமல்லா பகுதியில் அவரது ஆதரவாளர்கள் மனிதக் கேடயங்களை அமைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## செச்சினியாவில் ஜனாதிபதித் தேர்தல்!



1996 ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டாவது தடவையாக ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் செச்சினியாவில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு மக்கள் வாக்களிக்க உள்ளனர். இதன்மூலம் அங்கு அமைதியை ஏற்படுத்த முடியுமென்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

நாளாந்தம் சண்டைகள் தொடரும் செச்சினியாவில் ஒழுங்காக தேர்தல் நடத்தப்படுவது சாத்தியமில்லாத நிலையில், இது ஒரு கேலிக்கூத்தென மனித உரிமை அமைப்புகள் வர்ணித்துள்ளன.

### பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தோர் மீது

# பாகிஸ்தானில் தாக்குதல்; ஏழு பேர் உயிரிழந்தனர்!

பாகிஸ்தானில் தலைநகர் கராச்சியில் பிரார்த்தனை செய்வதற்குச் சென்ற மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் 7 பேர் கொல்லப்பட்டதாகவும், 7 பேர் காயமடைந்ததாகவும் அந்த நாட்டுப் பொலிஸார் தெவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றதாகவும், இதில் 20 ஷியா முஸ்லிம்கள் பிரயாணம் செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் மதத்தின் பிரிவுகளான ஷியா, சுனி ஆகியவற்றினிடையே வன்முறைகள் அதிகரித்துள்ளன.

பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது அவர்களின் பள்ளிவாசலில் வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டது ஒரு பயங்கரவாதச் செயல் என்று பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# அங்கோலாவில் தேர்தலை நடத்துமாறு கோரி 87 எதிர்க்கட்சிகளின் 10,000 பேர் ஆர்ப்பாட்டம்!



அங்கோலாவில் 87 எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10,000 இற்கு மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து தேர்தல் நடத்துவதற்கான திகதியை நிர்ணயிக்குமாறுகோரி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த 27 ஆண்டுகள் அங்கோலாவில் தொடர்ந்து நடைபெற்ற உள நாட்டு யுத்தம் - 18 மாதங்களுக்கு முன்னர் முடிவடைந்தது. ஆனால், தேர்தல் இதுவரை அங்கு நடத்தப்படவில்லை.

ஆனால், தேர்தல் ஒன்றிற்கு தயாராவதற்கு இன்னும் 2 ஆண்டுகள் தேவைப்படலாமென, அங்கோலா ஜனாதிபதி யோஷ் இடு ஆடோ டொஸ் சன்ரோஷ் தெரிவித்தார்.

சகாரா பாலைவனப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு ஆபிரிக்க நாடான அங்கோலா , நைஜீரியாவிற்கு அடுத்ததாக அதிகளவில் எண்ணை உற்பத்தி செய்யும் நாடாகும். ஆனால், 13 மில்லியன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்த எண்ணைவளம் போதாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கில் தாக்குதல்; அமெரிக்கர் ஒருவர் பலி!

(பக்தாத்)



ஈராக்கில் கடமைபுரியும் அமெரிக்க கூட்டுப்படைகளுக்கும், ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாமின் படைகளுக்கும் இடையில் தலைநகர் பக்தாத்தில் நடைபெற்ற மோதலில் அமெரிக்கர் ஒருவர் கொல்லப்பட்டார், பலர் காயமடைந்தனர்.

இதேவேளை, பஸ்ராவின தென்பகுதியில் பிரிட்டிஷ் படையினருடன் நடைபெற்ற மற்றொரு மோதலில் ஈராக்கியர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சதாமின் ஆட்சிக் காலத்தில் கடமையாற்றிய படையினரை வேலையிலிருந்து நீக்கியிருப்பதால், அவர்களுக்கு மாதாந்தம் சிறுதொகை கொடுக்கப்பட்டு வந்ததாகவும், அதனைப் பெற்றுக் கொள்ளவதற்காக பக்தாத்தில் அமைந்துள்ள இராணுவத் தளமொன்றுக்குச் சென்றபோது, நடைபெற்ற மோதலில் இவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்கா - இந்தியா கடற்பயிற்சி ஒத்திகை!

(புதுடெல்கி)

இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து பாரியளவிலான கடற்பயிற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளன.

ஆயிரக்கணக்கான கடற்படையினரும், போர்க்கப்பல்களும் இந்த பயிற்சியில் ஈடுபட்டன.

1990 ஆம் ஆண்டு மூன்று தடவைகள் இந்த வகையான பயிற்சிகளில் இரு நாடுகளும் ஈடுபட்டன.

ஆனால், 1998 ஆம் ஆண்டு இந்தியா அணு ஆயுதப் பரிசோதனைகளை நடத்திய பின் இந்தப் பயிற்சிகள் நிறுத்தப்




பட்டன. செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின் இரு நாடுகளும் சர்வதேச பயங்கரவாதத்திற்கெதிராகப் போராடுவதற்கு உடன் படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னரே, தற்போதைய பயிற்சிகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.




போகிற போக்கைப் பார்த்தால் எந்தநேரம் என்ன நடக்குமோ என்று சொல்லமுடியாமலிருக்கின்றதென்றார் நண்பர்.

எதைப் பற்றிச் சொல்கிறீர் என்று கேட்டேன்.

இப்ப எதைப் பற்றிச் சொல்லுவது. ஆமிக்காரங்கள் இரவிலும் பகலிலும் தங்கள் வாகனங்களில் கண்மண் தெரியாமல் வேகமாக ஒடுங்கிய வீதிகளில் சவாரியோட்டம் ஓடுகிறாங்கள்.

சாதாரணமாக இரண்டு வாகனங்கள் லேசாக முட்டுப்பட்டால் கூட விபத்தில் சிக்கிய வாகனங்களை சிறிது அரக்கிவிடக்கூட நியாயம் பேசுவாங்கள், பொலிஸ்காரர் வந்து மிரட்டுவாங்கள். ஆனால், இரண்டு அருமருந்தன்ன உயிர்களைக் காவுகொண்ட யாழ்ப்பாணம் பிரதான வீதி இராணுவ ட்ரக் விபத்தில் பொலிஸ்காரர்களும் இராணுவ அண்ணனுக்குத் தம்பி துணையாக நின்றார்கள். இதனால்தான், பொதுமக்கள் தாங்கள் சட்டத்தைக் கையிலெடுக்க முனைந்தார்கள். இதில் என்ன தப்பு?

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் பாதுகாப்புக்காக படைகள் வைக்கப்பட்டிருப்பதாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் நியாயம் சொல்லும். இந்த அரசும் பாதுகாப்புக்காக அதாவது நாட்டின் பாதுகாப்புக்காக இந்தப் படைகள் இங்கே நிலைகொண்டிருக்கின்றனவாம்.

யாருடைய பாதுகாப்புக்கு? என்று நண்பர் கேட்டார்.

படைகள் தங்கள் பாதுகாப்புக்கே அரண்கள் அமைத்து, மண்குவித்து மலை அமைத்து வீதியில் தடைகள் போட்டு தங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த அயல்நாடும் இலங்கை மீது படையெடுக்கும் சந்தர்ப்பம் இல்லை. விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் தொடங்கப்பட்டன. பேச்சுக்களின் பின்னர் இது இடைநிறுத்தப்பட்டு இடைக்கால நிர்வாகசபை ஆலோசனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் தொடங்குமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், வடக்கு - கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினர் தாங்கள் போரிட்டுக் கைப்பற்றிய பூமியில் நடமாடுவது போன்ற மனோபாவத்தைக் காட்டும் போக்கில்தான் சில இடங்களில் சிலர் நடந்து கொள்கிறார்கள். இவர்கள் சமாதானம் நீடிப்பதையோ நிரந்தரமாவதையோ விரும்புவதாகத் தோன்றவில்லை என்றார் மற்றொரு நண்பர்.

இப்படிப்பட்டவர்கள் சிங்களப் பத்திரிகைகள் சிலவற்றை மட்டுமே படிப்பவர்களாக இருக்கலாம் என்றார் நண்பர்.

சந்திரிகா அம்மையார் பேசுவது, அறிக்கை விடுவது ஜே.வி.பி, சிஹல உறுமய போன்றவற்றின் மிரட்டல்கள் சிங்களப் பத்திரிகைகள் சிலவற்றில் விபரமாக வெளிவருகின்றன.

சிங்களப் பெளத்த மக்களுக்குத்தான் நாடு சொந்தம். அவனுக்குச் சொந்தமில்லாமல் இலங்கையில் எந்தவொரு இடமுமில்லை என்று சிஹல உறுமய உறுமுகின்றது.

ஆங்கிலத் தினசரி ஒன்றும் அதன் சிங்கள சகோதரப் பத்திரிகையும் இதற்கு நன்றாகவே தூபம் போடுகின்றன. இந்தப் பத்திரிகைகள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளென்றே கடுமையாக எழுதி வருகின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் எந்தக் கொலை நடந்தாலும், ஆட்கள் காணாமல் போனாலும் அது புலிப் பயங்கரவாதிகளின் வேலையென்று இப்பத்திரிகைள் எழுதுகின்றன.

இந்தப் பத்திரிகைகள் நோர்வே மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஒரு தமிழனுக்குப் புலி முத்திரை குத்தியதுடன் இங்குள்ள நோர்வே தூதரகத்தையும் கிள்ளிவிட்டன. இந்தப் பிரசாரம் வெற்றியளிக்காமல் அவர் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னரும்கூட அவர் மோசடி செய்து வெற்றிபெற்றாரென்றும் சோடித்தன.

ஐரோப்பிய யூனியன் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய மறுத்துவிட்டதால் இந்தப் பத்திரிகைளுக்கு ஆத்திரமேற்பட்டது. எப்படியோ எல்லாம் ஐரோப்பிய யூனியன் மீது பாய்ந்து பாய்ந்து இவை கடித்தன. ஆனால் பல்லுப்பட முடியவில்லை.

பயங்கரவாதிகள் பட்டியலிலிருந்து விடுதலைப் புலிகளின் பெயரை நீக்க அமெரிக்கா விரும்பாதது இந்த இனவாதப் பத்திரிகைகளுக்குப் பெரும் சந்தோசம்! பாராட்டித் தள்ளுகின்றன!

உலகின் பெரிய பயங்கரவாதியென்று உலகநாடுகள் பலவும் ஏற்றுக்கொண்ட பின்லேடனை ஒழித்துக்கட்டப் போவதாகச் சொல்லி ஆப்கானிஸ்தானில் குண்டுவீசி அமெரிக்கா ஏற்படுத்திய அழிவு ஏராளம்.

ஈராக்கில் பயங்கர ஆயுதங்களை ஒழித்து வைத்திருப்பதாக அதிபர் சதாம் ஹுசைன் மீது பழியைப் போட்டு அவரின் புதல்வர்கள் உட்பட பொதுமக்களையும் கொன்றதுடன் நாட்டையே அழித்தது அமெரிக்கா.

ஈராக்கில் பயங்கர ஆயுதங்கள் இல்லையென்று இப்போது தெளிவாகிவிட்டது.

இப்போது யார் பயங்கரவாதி? இலங்கையில் அரச பயங்கரவாதத்தினால் 1983 இல் நடந்த இனக்கலக அழிவுக்கு அரசு மன்னிப்புக்கோர வேண்டுமென்று ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழு பிரகடனப்படுத்தியது.

ஆட்சியில் இருப்பவர்களும் இருந்தவர்களும் மன்னிப்புக்கோர முன்வரவில்லை. எதற்காக? இன்னமும் இவர்களும் அரச பயங்கரவாதத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பதுதான் என்கிறார் நண்பர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புனிதபூமி சிறுவர் இல்லத்தின் பதினோராவது ஆண்டு விழா!

(முல்லைத்தீவு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் இயங்கிவரும் புனிதபூமி சிறுவர் இல்லத்தின் பதினொராவது ஆண்டு நிறைவுதினம், நேற்று முத்தையன்கட்டில் அமைந்துள்ள, சிறுவர் இல்ல வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

புனிதபூமி சிறுவர் இல்ல ஆட்சிக்குழுத் தலைவர் சி.வேதவனம் தலைமையில காலை 11 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பாரதி இல்ல மாணவிகளின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன், விருந்தினர்கள் நிகழ்வு நடைபெற்ற இடத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தமிழீழ தேசியக் கொடியினை தலைமைச் செயலகச் செயலர் புதியவன் ஏற்றினார். புனர்வாழ்வுக் கொடியினை, உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவனும், சிறுவர் இல்லக் கொடியினை புனிதபூமி இயக்குநர் அஞ்சலனும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து புனிதபூமி இல்லப் பெயர்ப் பலகையினை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து புனிதபூமி இல்லநிறுவுனரான மாவீரர் லெப். கேணல் அன்புவின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.

ஆசியுரைகளை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கே.பி.றெஜி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திருமதி மார்க்கிரட் சந்துரு ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மலர் வெளியிடப்பட்டது. புனிதபூமி சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் - பாரதி இல்லம், காந்தி இல்லம், குருகுலம் இல்ல சிறுவர்கள் மற்றும் பெற்றோர்கள், போராளிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

## நாற்சந்தி

இன்று உலக ஆசிரியர்தினம்.

உலகின் நாளைய சந்ததியினரை - நாளைய மன்னர்களாக, மேதைகளாக, அறிஞர்களாக, விஞ்ஞானிகளாக இன்னும் எத்தனையோ துறைசார் நிபுணர்களாக உருவாக்கும் உன்னத பொறுப்பை ஏற்றுச்செயற்படுபவர்கள் உலக ஆசிரியர்களே...

ஒரு காலத்தில் குரு - சீட பரம்பரையாக வளர்ச்சிகண்ட அறிவுசார் உலகம் தற்போது ஆசிரிய - மாணவ பாரம்பரியமாக நவீனத்துவ வடிவம் கொண்டுள்ளது.

ஆனால், பாடசாலை வாழ்க்கை பரஸ்பர நல்லுறவையும், புரிந்துணர்வையும் அடிப்படையாகக் கொண்டது.

இருமொழி மீறாச் சீடனின் பலம் குருவின் ஆசியிலும், ஆளுமையிலும் தங்கியிருக்கிறது.

இன்றைய காலம் மாறுபட்டது. இது இலத்திரனியல் யுகம். கணனிகள் கற்றலை இலகுவாக்கிவிட்டது.

நவீன சாதனங்கள் - நவீன மாணவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து கற்றுக்கொடுக்கும் குருவாகிவிட்டன.

ஆனால் அதனைப் பயன்படுத்தவும் - அதன்மூலம் பயன்பெறவும் வழிகாட்ட ஆசிரியர்கள் தேவைப்படவே செய்கின்றனர்.

நேற்று விஜயதசமியும் கூட.

கனகண்ணை தன் பேரனுக்கு ஏடுதுவக்க ஏற்பாடு செய்திருந்தார். அதற்காக ஒரு ஆசிரியர் வீட்டிற்கே வந்திருந்தார். கந்தசாமி தன் கடைசி மகனை கணனி வகுப்பில் சேர்க்க ஏற்பாடு செய்திருந்தார். கணனி ஒன்றை வாங்கியுமிருந்தார்.

இயற்கை ஆசிரியரும் - செயற்கை ஆசிரியனும் இன்றைய மாணவனுக்கு இரட்டை வழிகாட்டியாகி நிற்பது அறிவின் வளர்ச்சியையும் அறிவியலின் வளர்ச்சியையும் காட்டுகிறது.

-தெருவாசி



# புலிகளின் ஆயுதக் கப்பலொன்று இந்தோனேசியாவில் பிடிபட்டதாம்

## கொழும்புப் பத்திரிகை கூறுகிறது

இந்தோனேஷியத் துறைமுகப் பகுதியில் கடந்தவாரம் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றை இந்தோனேஷியப் படைகள் கைப்பற்றியிருந்தன என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'அகஸ்தி' என்ற பெயருடைய இந்தக் கப்பலில் நீண்டதூரம் சென்று தாக்கக்கூடிய ஷெல்கள், மோட்டார்க்குண்டுகள், இடம்விட்டு இடம்தாக்கும் ஏவுகணைகள் மற்றும் இராணுவ உபகரணங்கள் என்பனவும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலிலிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் சயனைட் குடித்து இறந்ததாகவும், அவரது கடவுச் சீட்டு பங்களாதேஷ் நாட்டினுடையதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இருந்தபோதிலும், பெருமளவு பணத்தினை விடுதலைப் புலிகள் கொடுத்து கப்பலையும், இறந்தவரது உடலையும் மீட்டதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இந்தப் போட்டியில் 14, 16, 18, மற்றும் 20 வயதிற்குட்பட்ட அணிகள் விளையாடவுள்ளன.

# ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப 5850 பேருக்கு புதிய நியமனம்!

நாட்டிலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 5850 பேருக்கு விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள ஆசிரியர் தினத்தையொடி அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசாங்கம் கடந்த 19 மாதங்களாக அரச துறையில் நியமனங்கள் எதையும் வழங்கியிருக்கவில்லையெனினும் ஆசிரியர் துறையின் சுமார் 7000 வெற்றிடங்கள் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த வெற்றிடங்களுக்கு தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 1000 பேர் பட்டதாரிகள் 1850 பேர், கற்கைநெறி தமைகைளைக் கொண்ட 3000 பேர் ஆகியோரைக் கொண்டு ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பவிருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (01)

# அத்துமீறிய இந்திய மீனவர்கள் கைது

கச்சதீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கைக் கடற்படையினரால் 10 தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இவர்கள் இன்று விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# எரிபொருட்களின் விலை குறைப்பு!

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலைகளை நேற்று நள்ளிரவு தொடக்கம் குறைப்பதாக அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் 2 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 52 ரூபாவும்,

ஒரு லீற்றர் டீசலின் விலை ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 30 ரூபா 50 சதமும்,

ஒரு லீற்றர் மண்ணெண்ணையின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டு இதன் புதிய விலை 23 ரூபாவாகவும் இருக்குமென பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (01)

# ஈழநாடு செய்தியாளர் மீது படையினர் தாக்குதல்!

## வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

தண்ணீர்த்தாங்கியடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவ ட்ரக் - மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற நமது ஈழநாடு பத்திரிகை நிருபரும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்க உறுப்பினருமான க.பிரசாந்தன் படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய போது காயமடைந்தார்.

செய்தியாளர் மீதான இத்தகைய சம்பவங்களை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வன்மையாக கண்டிப்பதுடன், இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் தொடராதிருக்க சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கேட்டுள்ளது.

## 16 ஆவது ஆண்டு நினைவு...

வப்படங்களுக்கு மலர்மாலையினை த.விநாயகமூர்த்தி அணிவித்தார். இந்த நிகழ்வில் பெருமளவு பொதுமக்கள் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தியதோடு போராளிகளும் கலந்துகொண்டனர்.

வல்வெட்டித்துறை தீருவில் புனித சதுக்கத்தில் நேற்றுமாலை 5 மணியளவில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

கடற்புலிகளின் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கல்யாணி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரினை கடற்புலிகளின் தாக்குதல் தளபதி சலீம் ஏற்ற, தேசியக் கொடியை வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஏற்றிவைத்தார்.

குமரப்பா புலேந்திரன் உட்படப் பன்னிரு வேங்கைகள் நினைவான, புனரமைக்கப்பட்ட நினைவுத் தூபியைக் கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் தரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து குமரப்பா புலேந்திரன் உட்படப் பன்னிரு வேங்கைகளின் திருவுருவப்படத்திற்கு பெற்றோர்கள், உறவினர்கள், போராளிகள் எனச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து பொது மக்களும் போராளிகளும் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து இரவு நினைவுக் கூட்டம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் க.சூரியகுமாரன், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, கடற்புலிகளின் அரசியற்தறையைற் சேர்ந்த மறவன் மாஸ்ரர், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், அப்பாத்துறை விநாயகமூர்த்தி, பல்கலைக்கழக விரிவுரையாளர் செ.சந்திரசேகரன் ஆகியோர் உரையாற்றினர்.

இரவு மாணவர்களினதும், போராளிகளினதும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை மாங்குள்ம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் எழுச்சிப்பேரவை துணைச் செயலாளர் ச.சண்முகலிங்கம் தலைமை தாங்கினார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைச் செயலகத்திலும் குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கையின் நினைவுநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வு, தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் - வித்தியாலய அதிபர் திருமதி ஜெயமதி பொதுச்சுடரிளை ஏற்றி வைத்தார்.

கிளிநொச்சியில் உள்ள சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி மண்டபத்தில் போராளி குமரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளில் பொதுச்சுடர் ஏற்றல், ஆகைச்சுடர் ஏற்றல், தமிழீழ தேசியக் கொடியேற்றல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

(202,111,9)

## துன்பங்கள்...

குறிப்பாக எந்தவகையான கொடுப்பனவுகளையும் பெறாது தமது கடமைகளை செவ்வனே புரிந்து வருகின்ற தொண்டராசிரியர்களின் பணியை மறக்கக்கூடாது. அதேபோல் சிறிதளவு கொடுப்பனவுடன் கடமைபுரியும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பணியையும் மனந்திறந்து பாராட்டுகின்றோம். நடந்து கொண்டிருக்கும் அவர்களது போராட்டம் வெற்றிபெறுவதுடன் அவர்களுக்கு நிலையான பணியமர்த்தம் கிடைக்கவேண்டுமென்பதும் பேரவையின் வேணவாவாகும்.

ஒவ்வொரு பிள்ளையும் கற்க வேண்டும். அந்தப் பிள்ளையை நாட்டுக்கேற்ப நற்குடிகளாக உருவாக்க வேண்டுமென்ற நினைவுடனும், பொறுப்புடனும் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், பள்ளி முதல்வர்கள் கல்விசார் அலுவலகர்கள் அனைவரையும் உலக ஆசிரியர்நாள் கொண்டாடப்படும் இவ்வேளையில், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையானது வாழ்த்திப் பாராட்டி நிற்பதும் பெருமிதம் அடைகின்றது.

தமிழீழ பகுதிகளில் வாழ்கின்ற அனைத்துத் தமிழரும் இன்றைய நாளில் எமது ஆசிரியர்களை பாராட்டக் கடமைப்பட்டவர்கள். அந்த வலயங்களில் இது தொடர்பாக நிகழும் நிகழ்வுகளில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும் என்றும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பேரவை வேண்டிநிற்கின்றது. இன்றைய நாளில் ஒவ்வொரு தமிழ் மக்களின் நெஞ்சங்களிலும் எமது எதிர்கால ஏற்றத்தின் ஏணிப்படிகளான இவ் ஆசிரியர்களின் பணி போற்றப்பட வேண்டும். பாராட்டப்படவேண்டும். ஆசிரியர் உலகத்திற்கு இதுவே நாம் செய்யும் நன்றிக்கடனாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நம்பிக்கை....

பணிகளை விரிவாக மேற்கொள்ள முடியுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இறங்குதுறை ஊழியர்கள்...

இதனையடுத்து இறங்குதுறையில் பணிபுரியும் 30 தொழிலாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கப்பலிருந்து பொருட்களை இறக்குவதற்காக 524 ஆவது இராணுவப் படைத்தளத்துக்குள் சென்ற 30 தொழிலாளர்களும், கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் விடுவிக்கும்படியும் இல்லாவிடில் தொழிலில் ஈடுபடமாட்டோம் எனத் தெரிவித்ததையடுத்து படையினர் அந்த முப்பது பேரையும் காலை 8 மணி முதல் மதியம்வரை தடுத்து வைத்திருந்தனர்.

இதனையடுத்து, அங்கு கூடிய பெருமளவு பொதுமக்கள், 30 தொழிலாளர்களையும் கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களையும் விடுவிக்கும்படி கோரித் திரண்டபோது நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்ம் 524 ஆவது படைத்தலைமையகத்துக்குள் சென்று பேசியதையடுத்து முப்பது தொழிலாளர்களையும் விடுவித்த படையினர், இளைஞர்கள் இருவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இரு இளைஞர்களின் வாக்குமூலங்களையும் பெற்ற பொலிஸார் அவர்களை விடுவித்தனர்.

நேற்று மாலை இவர்கள் இருவரையும் அழைத்த பருத்தித்துறைப் பொலிஸார், இருவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும், நீதிமன்றம் கட்டளை அனுப்பும்போது நீதிமன்றில் ஆஜராகுமாறு தெரிவித்தனர்.

இதேவேளை இன்று வழமைபோல் இறங்குதுறையில் பொருட்கள் ஏற்றி இறக்கும் பணி நடைபெறுமென இறங்குதுறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தொழிலாளர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக, பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து கப்பல் திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதியின் பாதுகாப்பு...

காப்புத் தொடர்பாக எடுக்கப்படும் சட்டங்களை இந்தத் தேசிய பாதுகாப்புச் சபை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் தொடர்பான பிரச்சினை ஏதாவது ஏற்பட்டு இந்தத் தேசிய பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்படும்போது பொலிஸ்மா அதிபரும் உடனிருக்கவேண்டும்.

தேசிய பாதுகாப்பு நெருக்கடிக்குள்ளாகி அது தொடர்பான கூட்டம் நடைபெறும்போது வெளிவிவகார அமைச்சரும் உடனிருக்கலாம்.

தேசிய பாதுகாப்புச் சபையினர் அமைச்சர்களின், அமைச்சு தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் போது எந்தவொரு அமைச்சரையும் கூட்டத்துக்கு அழைக்கலாம்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான கூட்டத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலர், முப்படைத் தளபதிகள், புலனாய்வு அதிகாரிகள் போன்றோர் நிரந்தரமான ஆலோசகர்களாக இருப்பதுடன் பங்குபற்றவும் வேண்டும்.

## வவுனியா....

வரையும் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவிக்கையில்,

சமாதானத்துக்கு எதிரான தீய சக்திகள் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதாகவும், இந்தச் தீயசக்திகளை மக்கள் இனங்கண்டு, அவர்கள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும் எனவும், இவர்களுக்கு எதிராகத் தாம் கடும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (03)

## பக்க வடிவமைப்பாளர் தேவை

பத்திரிகைத்துறையில் முன்அனுபவமுடைய Page Maker, CorelDRAW வில் தேர்ச்சி பெற்றவர்கள் தேவை.

தகுதியானவர்கள் இன்று காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

இல.267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.